
JESUS REDEEMS MINISTRIES
வாலிபர்
உலகம்
Volume: 16 | Issue: 01 | March 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10
தடைகளும் தாமதங்களும் உன்னைத் தடுத்தாலும்,
தரித்து நிற்காமல்
உயர
பறந்திடு

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.



## உள்ளே...



04



12



22



30

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

JESUS REDEEMS MINISTRIES
இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

## எனக்குப் பிரியமான வாலிபர்களே!

உங்களைச் சாதிக்கிறவர்களாகவும், சாதனையாளர்களாகவும் ஒவ்வொரு நாளும் மாற்றிக் கொண்டிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம்!

மாணவர்களுக்குத் தங்களுடைய தேர்வைக் குறித்தும் எதிர்காலங்களைக் குறித்த பயமும் அதிக எதிர்பார்ப்பும் உள்ள மாதமாக இந்த மாதம் மாறிவிட்டது.

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் வெற்றியைத் தேவன் நிச்சயம் தந்து உங்களை ஆசீர்வதிப்பார். அவர் தேர்வு நாட்களுக்கு மட்டும் உதவி செய்யும் தேவன் அல்ல; உங்கள் வாழ்க்கையின் முடிவு வரைக்கும் உதவி செய்து, உங்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி உயர பறக்கச் செய்யும் தேவன்.

இன்றைக்கு ஒவ்வொரு வாலிபர்களும் உயர பறக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்படுகின்றனர். ஆனால் அதோடு கூட உடனே பறக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களைப் பல தவறான குறுக்கு வழிகளுக்குக் கொண்டு செல்கிறது.



**இன்றைக்கு உலகம் சொல்லும் Tagline...**

- “உண்மை இல்லாமல் வாழலாம்”
- “உழைப்பு இல்லாமல் உயரலாம்”
- “முயற்சி இல்லாமல் ஜெயிக்கலாம்”
- “பயிற்சி இல்லாமல் பறக்கலாம்”
- “எதையும் உன் இஷ்டம்போல் அனுபவிக்கலாம்”

என்று பல வார்த்தைகளைச் சொல்லி உங்களை உற்சாகப்படுத்தும்.

இவற்றையும் இன்றைய வாலிபர்கள் சிலர் பின்பற்றி மாயையான வலையில் விழுந்து தங்கள் வாழ்க்கையில் உயர பறக்க வேண்டியவர்கள், தடுமாறி தடம் புரண்டு உருக்குலைந்து போய்விட்டனர்.

## இப்படி உலகத்துக்குப் பின்னால் சென்று இடறின வாலிபர்களைக் குறித்து உன்னுடைய கரிசனையும் பாரமும் தான் என்ன?

இவர்களின் வாழ்க்கையும் இயேசுவோடு இணையும்போது பெரிய மறுமலர்ச்சியும், மறுரூபமும் உண்டாகும் என்பதில் சந்தேகமே இல்லை. இப்படிப்பட்ட வாலிப சமுதாயத்துக்கு இயேசுவின் அன்பை அறிவிக்க வேண்டுமானால், நீ பெலப்பட்டிருக்க வேண்டும்.

எனவே காத்திருந்து, பெலப்பட்டு, ஸ்திரப்பட்டு தேவனுக்காக எழும்பி நீ வல்லமையாய் செயல்படு. இந்த வாலிப சமுதாயத்திற்காக கர்த்தர் உன்னை நம்புகிறார். அதற்காகவே உன்னை அழைத்திருக்கிறார், அபிஷேகித்திருக்கிறார், வல்லமைப்படுத்தியிருக்கிறார். மனந்திரும்புகிற எழுப்புதல் ஆரம்பித்து விட்டது. நீ செயல்பட்டால், ஒரு பெரிய மனந்திரும்புதலை வாலிப சமுதாயத்தில் காண முடியும். கர்த்தர் உங்களை பெலப்படுத்துவாராக.

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: வில்லியம்




# விழிகள் இல்லை!! ஆனால் சிகரம் தொட்டார்!!

**இயேசுவை அறியாத குடும்பத்தில், கண் பார்வை இல்லாமல் பிறந்து அநேக சவால்களைக் கடந்து, என்னாலும் முடியும் என்று படித்து, பட்டப் படிப்பை முடித்ததோடு, விளையாட்டிலும் ஆர்வம் காட்டி, இந்தியாவுக்காக விளையாடி, இன்றைக்கு ஒரு பெரிய உயர் அதிகாரியாக வலம் வந்துகொண்டிருக்கும் சகோதரர் மகாராஜா அவர்களின் வாழ்க்கை இதோ உங்களுக்காக...!**

## உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள துரைசாமிபுரம் என்ற கிராமத்தில் திரு. சிவசுப்பிரமணியன் திருமதி சண்முககனிக்கு 3வது மகனாகப் பிறந்தேன். எனக்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருக்கிறார்கள். நான் பிறக்கும்போதே முழுமையாகப் பார்வை இல்லாமல் பிறந்தேன். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பார்வை உள்ளவர்கள் படிக்கும் பள்ளியில் தான் படித்தேன். அதற்குப் பிறகுதான் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை பார்வையற்றோர் பள்ளியைப் பற்றிக் கேள்விப்பட்டு, 2009ஆம் ஆண்டு அந்தப் பள்ளியில் சேர்ந்து படித்தேன். அங்குச் சென்றவுடன் பார்வையற்றோர் கற்கும் பிரெய்ல் எழுத்துமுறைப் படிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒன்றாம் வகுப்பிலிருந்து படித்தால்தான், அதைப் புரிந்து கொள்ள முடியும் என்று ஆசிரியர்களால் அறிவுறுத்தப்பட்டேன். அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு திரும்பவும் ஒன்றாம் வகுப்பிலிருந்து என்னுடைய கல்வியைத் தொடர்ந்தேன்.

என்னுடைய குடும்பம் இயேசுவை அறியாத குடும்பம். இந்தப் பள்ளிக்கு வந்த பின்னர் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றித் தெரிந்து கொண்டேன். சிறுவயதிலிருந்து கடவுள் என்றாலே நம்பிக்கை இல்லாமல் இருந்த எனக்கு, இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்பட்ட பின்னர், ஏதோ ஒரு நம்பிக்கையும் ஆர்வமும் வந்து, ஆண்டவரை நோக்கி ஜெபம் செய்யத் தூண்டியது. இப்படி நாட்கள் செல்லச் செல்ல நான் எனக்குத் தேவையான அனைத்தையும்





இயேசப்பாவிடம் கேட்க ஆரம்பித்தேன். என் தேவையை அறிந்து ஒவ்வொன்றாகக் கொடுத்து அவர் என்னை ஆசீர்வதித்தார்.

**சூப்பர்... சிறுபிராயம் மற்றும் குடும்பம்பற்றி அறிந்து கொண்டோம்... உங்களுடைய படிப்பைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

ஒன்றாம் வகுப்பு முதல் பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை நான் எல்லா வகுப்பிலும் முதல் மாணவனாகவே தேர்ச்சி பெற்று வந்தேன். 2018ஆம் ஆண்டு 10ம் வகுப்பு அரசுத் தேர்வை எழுதப் போகும் முன்பு மாணவர்களுக்காக நடத்தக்கூடிய Achievers meetingல் கலந்துகொண்டு நானும் முதல் மதிப்பெண் எடுக்க வேண்டும் என்று ஜெபித்து தேர்வும் எழுதினேன்.

ஆனால், நான் வேண்டியது நிறைவேறவில்லை. கர்த்தர் எனக்கு வேறொரு சித்தம் வைத்திருக்கிறார் என்று அப்போது எனக்குப் புரியவில்லை. அந்தத் தேர்வில் நான் பள்ளியில் ஏழாவது மாணவனாக வந்தேன். அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கர்த்தரை வெறுக்க ஆரம்பித்தேன். அதற்குப் பின்னர் படிப்பில் இருக்கும் ஆர்வமும் எனக்குக் குறைந்தது. பதினொன்றாம் வகுப்பில் இரண்டாவது மதிப்பெண் பெற்றேன்.



2020ஆம் ஆண்டு நான் 12 ஆம் வகுப்பு படிக்கும்போது மீண்டும் அதே Achievers கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு 600க்கு 521 மதிப்பெண்கள் கொடுத்துப் பள்ளியில் முதல் மாணவனாக வரச் செய்தார். மேலும் மதுரையில் உள்ள ஒரு கல்லூரியில் ஆங்கிலம் இளங்கலை பட்டம் படிக்கவும் கிருபை செய்தார். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே, எனது தந்தையின் இழப்பு மற்றும் பல துயரங்களைச் சந்திக்க வேண்டிய நிலை வந்தது. ஆனாலும் இயேசு என்னைக் கைவிடவில்லை. தொடர்ந்து படிக்கக் கிருபை கொடுத்தார். நான் விரும்பின சில காரியங்கள் என்னிடமிருந்து பிரிந்து சென்றாலும், கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வத்தைக் கொடுத்து, என்னைப் புதிய உயரங்களுக்கு கொண்டு சென்றார். அதுமட்டுமல்லாமல் Good Samaritan மூலமாக அநேக உதவிகள் கிடைத்தது. அது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது.

**விழிகள் இருந்தும் படிக்காமல் இருக்கும் மாணவர்கள் மத்தியில், நீங்கள் இளங்கலைப் படிப்பைப் படித்தீர்கள்... கிரிக்கெட் உங்களை உயர்த்தியது என்று சொன்னீர்கள்... எப்படி கிரிக்கெட் மீது ஆர்வம் வந்தது?**

பார்வையற்றோர் பள்ளியில் கல்வியோடு விளையாட்டையும் கற்றுக் கொடுத்தார்கள். நானும் மிக ஆர்வமாக விளையாட ஆரம்பித்தேன். அதிலும் முக்கியமாகப் பார்வையற்றோர் விளையாடும் கிரிக்கெட் விளையாட்டை விரும்பிக் கற்றுக் கொண்டேன். ஒருமுறை பார்வையற்றோருக்கான கிரிக்கெட் போட்டியில் இந்தியா உலகக் கோப்பையை வென்று, சாதனை படைத்துள்ளது என்று என்னுடைய ஆசிரியர் ஒருவர் செய்தித்தாளில் வாசிப்பதை ஏதேச்சையாகக் கேட்டேன். அப்போதுதான் எனக்கும் இந்திய பார்வையற்றோர் கிரிக்கெட் அணியில் விளையாட




வேண்டும் என்ற ஆர்வம் வந்தது. அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே என் ஆசிரியரிடம், ''ஆண்டவர் என்னோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு, நானும் ஒருநாள் இந்திய அணியில் விளையாடுவேன்; கண்டிப்பாக ஒருநாள் நீங்கள் அதையும் செய்தித்தாளில் வாசிப்பீர்கள்'' என்று கூறினேன்.

அந்த நம்ப முடியாத செயல்பாட்டை தேவ கிருபையால் நான் நினைத்த காலத்திற்குள்ளேயே எனக்கு நிறைவேற்றிக் கொடுத்தார். அதிலும் முக்கியமாக என்னுடைய சிறு வயதில் நான் எந்த வீரரைப் பற்றிச் செய்தித்தாளில் படித்தேனோ, அவருடன் இந்திய அணியில் விளையாட வாய்ப்பு கிடைத்தது.

கல்லூரி முடிக்கும்போது இந்திய அணிக்கு விளையாடுவதற்கான தேர்வில் கலந்து கொண்டு அதில் வெற்றி பெற்று முதன்முறையாக இந்திய அணிக்காக விளையாடப் பயிற்சியும் எடுத்தேன். **TamilNadu Blind association** கீழ் விளையாடிக் கொண்டிருந்த என்னை, சிறப்பாக விளையாடினதினால் **Cricket Association for Blind in India** அவர்களால் தேர்வுக்கு அழைக்கப்பட்டு இந்தியா அணிக்கு தேர்வு செய்யப்பட்டேன்.

அதுமட்டுமல்லாமல், முதன்முறையாக 2023ஆம் ஆண்டு இந்திய அணியில் தேர்வு செய்யப்பட்டு, இங்கிலாந்தில் நடைபெற்ற உலக அளவிலான போட்டியில் விளையாடி வெள்ளிப் பதக்கம் பெற்றோம். தற்போது **Tamil Nadu salt corporation** என்ற நிறுவனத்தில் **labour welfare officer** உயர் அதிகாரியாகப் பணி செய்து கொண்டிருக்கிறேன். மாதம் பத்தாயிரம் ரூபாவுக்கு கஷ்டப்பட்ட எங்கள் குடும்பத்தை, தற்போது நினைத்துப் பார்க்க முடியாத உயரத்திற்கு கர்த்தர் கொண்டு சென்றிருக்கிறார்.



**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

*கர்த்தரை நம்பினோர் ஒருநாளும் கைவிடப்படுவதில்லை. நீங்களும் இயேசுவை நம்புங்கள்! அவர் உங்களை உயரமான இடத்திற்கு கொண்டு செல்வார். ஆனால் அதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும், கடினமாக உழைக்க வேண்டும். வெற்றியும் தோல்வியும் கர்த்தர் கரத்தில் இருக்கிறது. கர்த்தருக்கென்று நேரம் கொடுத்து, தொடர்ந்து இயேசுவைப் பின்பற்றினால் கட்டாயம் உங்களையும் அவரால் உயர்த்த முடியும்.*

**அன்பான வாலிபர்களே!**
**பிறவியிலிருந்தே கண்பார்வையற்ற சகோதரர் மகாராஜாவை இவ்வளவு உயர்த்தி பெரிய ஸ்தானத்தில் வைக்க முடியுமானால், உங்களையும் தேவனால் உயர்த்த முடியும். அதற்கு நீங்கள் அவருக்கென்று ஒப்புக்கொடுக்கும்போது, இயேசு உங்களையும் நிச்சயமாக உயர்த்தி அழகு பார்ப்பார்!! ■**

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழேக் கொடுக்கப்பட்டுள்ள பெண்களைக் குறித்ததான
கேள்விகளுக்கு சரியான விடையைக் கண்டுபிடித்து
வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1) எவ்விடத்து கன்னிப்பெண்கள் பென்யமீனுக்காக கொண்டு வரப்பட்டனர்?

2) கர்ப்ப வேதனைப்பட்டு குனிந்து பிரசவித்த பெண் யார்?

3) தன் புருஷனால் இரட்டிப்பான நன்மை பெற்ற மனைவி?

4) கிலியோனின் மனைவி பெயர் என்ன?

5) மக்லோனின் மனைவி பெயர் என்ன?

6) ஓபேத்தை வளர்க்கும் தாயானது யார்?

7) பலகணி வழியாய் பார்த்து தாவீதை தன் இருதயத்தில் அவமதித்தது யார்?

8) இஸ்ரவேலின் முதல் இராஜாவின் முதல் மகள் யார்?

9. புருஷனின் உத்தமத்தை அலட்சியம் செய்த பெண் யார்?

10) ஞானவானாகிய ராஜாவை விடுகதைகளால் சோதித்த பெண் யார்?

11) தண்ணீரைக் கொடுத்து பொற்பரிசுகள் பெற்றது யார்?

12) அக்கா மீது பொறாமைக் கொண்ட தங்கை யார்?

13) சவுலுக்கு தன் வீட்டுக்கு கொடுத்த கன்றுக்குட்டியை அடித்து புளிப்பில்லா அப்பஞ்சுட்டு கொடுத்த ஸ்திரீ யார்?

14) அதோனியாவின் தாயார் பெயர் என்ன?






## கடந்த மாத விடைகள்

1. நோவா (ஆதியாகமம் :7:1)
2. கிரேத்தா (அப்போஸ்தலர்:27:7)
3. கில்போவா (1 சாமுவேல் :28:4)
4. ஓர்பாள் (ரூத்:1:4)
5. சிக்லாக் (1 சாமுவேல் :27:6)
6. சீகேம் (ஆதியாகமம் :12:6)
7. எக்லோன் (நியாயாதிபதி :3:12)
8. மிஸ்பா (ஆதியாகமம் :31:50)
9. எலிமெலேக்கு (ரூத்:1:2)
10. சாறிபாத் (1 இராஜாக்கள் :17:9)

கடந்த மாத வெற்றியாளர்
சகோதரி ஸ்வீட்லின், அஞ்சுகிராமம்
அவர்களை வாழ்த்துகிறோம்.

பதில் வந்து
சேர வேண்டிய
கடைசி நாள்
15.03.2025




Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

# இது நட்பு அல்ல!

Heart Beat

நான் கல்லூரி 3ஆம் ஆண்டு படிக்கிறேன். முதலாம் ஆண்டு ஆரம்பிக்கும் போது எனக்கு ஒரு தோழி கிடைத்தாள். அவள் எனக்காக எது வேண்டுமானாலும் செய்வாள் என்பதால் நாங்கள் இருவரும் இணை பிரியாத தோழிகளாக இருந்தோம். ஆனால் அவள் என்னை தோழியாக பார்க்காமல், வேறு சில காரியங்களை என்னிடம் எதிர்பார்த்து பழகியிருக்கிறாள். நான் முழுமனதோடு அவளோடு நெருங்கி பழகினேன். ஆனால் அவள் என்னிடம் தவறான எண்ணத்துடன் பழகி இருக்கிறாள் என்பது பிறகு தான் எனக்கு தெரிந்தது. என்னைத் தொட்டு பேசுவது. என்னோடு தனிமையில் இருக்க விரும்புவது, மேலும் எந்த தோழியையும் என்னிடம் பேச விடாமல், அவள் மட்டும் என்னிடம் பேசுவது போன்ற பல காரியங்கள் என்னை சற்று சிந்திக்க வைத்தது. இவையெல்லாம் தெரிந்தவுடன், நான் அவளுடன் உள்ள தொடர்பை துண்டித்து விட்டேன். ஆகையால் இப்பொழுது, நீ என்னிடம் பேசவில்லை என்றால் நான் தவறான முடிவு எடுப்பேன் என்று என்னை மிரட்டி சித்ரவதை செய்கிறாள். உன்னுடன் பேசாமல் என்னால் இருக்க முடியவில்லை. தயவுசெய்து என்னிடம் பேசு, பழகு என்பதாக சொல்கிறாள். இதனால் என்னால் படிக்க முடியவில்லை, நான் கல்லூரிப் படிப்பை முடிக்க முடியுமா என்ற கேள்விக்குறியோடு இருக்கிறேன். நான் இதிலிருந்து எப்படி வெளிவருவது? நான் படித்து வெற்றியை அடைய முடியுமா?

- ஸ்நேகா, ஊட்டி.

அன்பு சகோதரி ஸ்நேகா, உங்கள் கடிதம் படிப்பதற்கு சற்று வேதனையாகவும் துக்கமாகவும் இருக்கிறது. ஒருபக்கம் தோழியின் பிரிவு, மறுபக்கம் உயிருக்கு உயிராக பழகிய தோழி, தவறான எண்ணத்தோடு பழகினாளே என்ற வேதனை. ஸ்நேகா, நீங்கள் வேதனைப்படவோ, வருத்தப்படவோ, ஏன் பயப்படவோ வேண்டாம். தவறான உறவு என்பதை அறிந்தவுடன், நீங்கள் அந்த உறவை துண்டித்து விட்டீர்கள். எனவே அந்த உறவைக் குறித்து கவலைப்பட வேண்டாம். நீங்கள் பரிதாபப்பட்டு மறுபடியும் பேசினாலோ பழகினாலோ, உங்களால் எழும்ப முடியாத ஒரு அகல ஆழ பாதாளத்தில் விழுந்து விடுவீர்கள். இரு தோழிகள் இடையே உள்ள நட்பு என்பது வேறு; இந்த விதமான தவறான உறவு என்பது ஆபத்தானது. இதை பலரும் இயல்பு தான் என்றும், தவறு அல்ல, இது ஒருவிதமான அன்பு என்றும் மிகத் தவறான அர்த்தத்தை சொல்லுவார்கள். இப்படிப்பட்ட உறவு இயற்கைக்கு முரணானது. இப்படி பெண்ணோடு பெண் தவறாக நெருக்கமாக பழகுவது விபரீதத்தில் தான் முடியும். இது ஒரு பாவச் செயல். கேன்சர் போன்ற நோய்கள் உருவாகி சரீரத்தில் பல உறுப்புகளை பாதித்துச் செயலிழக்க செய்து உயிரையே மாய்த்து விடுவதைப் போல, இப்படிப்பட்ட தவறான உறவு உண்மையான நட்பை பாதித்து, எல்லா தோழிகளையும் தவறான உறவில் ஈடுபடுத்துகிற பெண்ணாய் மாற்றிவிடும்.



## ஸ்நேகா நீங்கள் செய்ய வேண்டியது...

இந்த உறவிலிருந்து வெளியே வந்தது மிக மிக நல்லச் செயல். ஆனால் மீண்டும் அவர்களைப் பார்ப்பதையும், பேசுவதையும் தவிர்த்தால் தான், உங்களால் இந்த அதிர்ச்சியிலிருந்து வெளியே வர முடியும்.

எந்த ஒரு குற்ற மனசாட்சிக்கும் இடம் கொடுக்க வேண்டாம்.

ஒரு தோழியின் உறவை துண்டிப்பது, அவளுக்கு வேதனையை தரும் என்று யோசிக்க வேண்டாம். பாம்புக்கு பாவம் பார்ப்பது தவறு; அது உங்களை தாக்கி உங்கள் உயிரையே மாய்த்து விடும்.



அவள் தவறான முடிவு எடுத்து விடுவாள் என்று பயப்பட வேண்டாம். தேவ ஆலோசனையும் அறிவுரையும் தரக்கூடிய நபரிடத்தில் உங்கள் தோழி சென்றால் இந்த ஆபத்தான உறவு மற்றும் உணர்விலிருந்து வெளியே வர முடியும்.

எனவே மாணவிகளிடம் அன்பும், அவர்கள் எதிர்காலத்தைக் குறித்த கரிசனையும் உள்ள ஆசிரியரிடமோ அல்லது உங்கள் Senior அக்காமார் நன்றாக ஜெபிக்கின்ற அனுபவமும் ஆலோசனையும் வழங்கும் நபரிடம் உங்கள் தோழியை அழைத்து செல்லும்போது, உங்கள் தோழியும் இந்த தவறான உணர்வு மற்றும் உறவிலிருந்து வெளியே வர முடியும்.



இதை நீங்கள் செய்யும்போது, உங்கள் மனதை மறுபடியும் படிப்பில் கவனம் செலுத்த முடியும்.



இயேசு கிறிஸ்துவினால் மன்னிக்க முடியாத எந்த பாவமும் இல்லை. அவர் இரத்தத்தினால் கழுவ முடியாத பெரிய பாவமும் இல்லை.

இப்பொழுது உங்கள் தோழிக்கு தேவை விடுதலை. இது பாவமான செயல் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

அந்த பாவப் பழக்கத்திலிருந்து வெளியே வர விரும்பினால், இயேசு கட்டாயம் அற்புதமாக விடுதலைத் தருவார்.

### ஸ்நேகா, ஒருவேளை இந்தக் காரியத்தை நீங்கள் அலட்சியமாக விட்டுவிட்டால்...

இந்த உறவு மிக ஆபத்தான பாதைக்கு உங்களைக் கொண்டு செல்லும்.

உங்கள் தோழிபோல் நீங்களும் மாற வாய்ப்பு உண்டு.

உங்கள் இருவரால் உங்கள் கல்லூரியில் உள்ள மாணவிகள் பாதிக்கப்படுவார்கள். அவர்களால் சமுதாயமே பாதிக்கப்படும்.

வருங்கால இளைய சமுதாயம் பாதிப்புக்குள்ளாகி, பாவத்தில் மூழ்க வாய்ப்பு உண்டு.

**எனவே கவனம்!** இப்படிப்பட்ட செயல்களை முளையிலேயே கிள்ளிப் போட வேண்டும். வளர விட்டால் செடியாகி, மரமாகி, வேர் விட்டு ஆலமரமாய் மாறி, ஒரு சமுதாயத்தையே பாதித்து சீரழித்து விடும்.
**குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்** (யோவான் 8:36)
**சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** (யோவான் 8:32).

### ஒரு சிறிய முயற்சி

ஸ்நேகா, நீங்கள் இந்த குழியில் விழாதபடி உங்களைப் பாதுகாத்துக் கொண்டு, உங்கள் தோழியையும் இந்த பாவத்திலிருந்து வெளியே கொண்டு வந்து, இன்னும் பல பெண்கள் கல்லூரியில் பாதிக்கப்படாதபடி ஜெபம் செய்யுங்கள். உங்கள் கல்லூரியில் ஒரு சிறிய ஜெபக்குழு ஆரம்பித்து, கல்லூரி முடிந்த பிறகு அல்லது இடைவேளை நேரம் 10 அல்லது 15 நிமிடம் ஜெபிக்க முற்படுங்கள். உங்கள் கல்லூரியில் ஒரு பெரிய மாற்றம் உண்டாகும். எல்லா தோழிகளும் காதல், தவறான உறவு, போதை, சோர்வு போன்ற காரியங்களில் கவனம் செலுத்தாமல், முழுக்க முழுக்க படிப்பில் கவனம் செலுத்த முடியும். ஜெபியுங்கள்! ஜெயம் பெறுவீர்கள்! ■



# வெற்றி நிச்சயம்!

தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபாரகாலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது (தானி. 6:28).

தானியேல் ஒரு ஜெயம்பெற்ற மனிதனாக இருந்தார் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் அவருடைய இளம் வயதில் பல தோல்விகளை, ஏமாற்றங்களைச் சந்தித்த ஒரு வாலிபனாகத் தான் இருந்தார். இஸ்ரேல் தேசத்தை, நேபுகாத்நேச்சார் என்ற பாபிலோன் தேசத்து இராஜா படையெடுத்துப்போய், அந்தத் தேசத்தை அழித்து அங்கிருந்த அநேகரை அடிமைகளாகக் கொண்டு வந்தார். அதில் வாலிபர்களாகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற வாலிபர்களுடன் தானியேலும் ஒருவர். இளம் வாலிபனாய் தன் பெற்றோரை இழந்து, சொந்த தேசத்தை விட்டு அந்நிய தேசத்தில் ஒரு அடிமையாக வந்தவர் தானியேல். ‘ஆசீர்வாதமான எருசலேம் தேசத்திலிருந்து அடிமையாக இந்தத் தேசத்திற்கு கொண்டு வந்தார்களே’ என்று ஆரம்பத்தில் சோர்ந்து போய் இருந்திருக்கலாம். ஆனால் அதே தானியேலை தேவன் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி, தேசாதிபதிகள், பிரதானிகளுக்கும் மேலாக உயர்த்தி இராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்தார். இராஜாவுக்கு ஆலோசனைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அவருடைய காரியம் ஜெயமாக இருந்தது என்பதாக வேதம் சொல்லுகிறது.



இளம் வயதில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை தேவன் தெரிந்தெடுத்து அவரை இராஜாவாக உயர்த்தின சம்பவத்தை நாம் வேதத்தில் பார்க்கலாம்.



தன் தாய் தகப்பனை இழந்து அனாதையாக்கப்பட்ட எஸ்தர் என்கிற வாலிப மகள், ‘அந்நிய தேசத்தில், அடிமையாக இருக்கிற நான், எப்படி வாழப் போகிறேன்’ என்று நினைத்திருக்கலாம். ஆனால் 127 நாடுகளுக்கு ராணியாக உயர்த்தி கர்த்தர் அவளை ஆசீர்வதித்த சம்பவம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.



தன் தேசத்திலிருந்து தனது சகோதரர்களால் விற்கப்பட்டு அந்நிய தேசத்திற்கு அடிமையாகக் கொண்டு வரப்பட்ட யோசேப்பு என்கிற வாலிபன் தன் தகப்பனை விட்டுப் பிரிக்கப்பட்டான், அபாண்டமாகப் பழி சுமத்தப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டு, எல்லாவற்றையும் இழந்து நின்ற சூழ்நிலையில் தேவன் எகிப்து தேசத்தில் இராஜாவிற்கு அடுத்த ஸ்தானத்தில் உயர்த்தின சம்பவம் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

இன்றைக்கும் அதே ஆண்டவர் அற்புதம் செய்கிறவராக இருக்கிறார். நீங்கள் எழுதப் போகிற தேர்வில் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று உங்களைப் பார்த்துச் சொல்கிறார். தானியேலின் காரியத்தை ஜெயமாக்கின தேவன் உங்களுக்கும் செய்ய வேண்டுமானால், தானியேலிடம் சில குணநலன்கள் இருந்தது. அந்தக் குணநலன்கள் உங்களிடமும் காணப்பட வேண்டும் (தானியேல் 6:4).



செய்தி:
மோகன் சி.லாசரஸ்

## குற்றமற்ற வாழ்க்கை:

தானியேல் குற்றம் உள்ளவர் என்று கைநீட்டி சொல்லும் அளவிற்கு வாழாதபடி பரிசுத்தமுள்ள, உண்மையுள்ள வாழ்க்கைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தினால் தான் தேவன் அவரை உயர்த்தினார். உங்களுடைய விருப்பப்படி வாழ்ந்து, இந்த உலகத்தை அனுபவிக்க வேண்டும் என்று விருப்பம்போல் உலகத்தின் சிற்றின்பங்களுக்கு பின்னால் போகிறவர்களைத் தேவன் உயர்த்த முடியாது. உங்கள் வாழ்க்கையில் பரிசுத்தம் அவசியம். ஏனென்றால் இயேசு பரிசுத்தமுள்ள தேவன். தானியேல் அந்தத் தேசத்தில் வந்தபோதே, 'நான் பாவத்திற்கு இடம் கொடுக்கமாட்டேன், என்னைத் தீட்டுப்படுத்த இடம் கொடுக்கமாட்டேன்' என்று ஒரு தீர்மானம் செய்து அர்ப்பணித்ததினால் தான் கர்த்தர் அவரை உயர்த்தினார் (தானியேல் 1:8).

**ஜெப வாழ்க்கை:** தானியேல் தினம் 3 வேளை ஜெபிக்கும் பழக்கம் உள்ளவராக இருந்தார். அந்தத் தேசத்தில் ஜெபிக்கக் கூடாது என்று சட்டம் வந்தபோதும் தான் செய்து வந்தபடியே ஜெபித்தார். நீங்களும் தானியேலைப் போலத் தினமும் ஜெபிக்க ஒப்புக்கொடுக்க வேண்டும். காலையிலும் மாலையிலும் வேதம் வாசித்து ஆண்டவரை தேடும்போது வெற்றியைத் தந்து உயர்த்துவார்.



**விசுவாச வாழ்க்கை:** தானியேல் விசுவாசம் உள்ளவராக இருந்தார் (தானியேல் 6: 23). சிங்கக் கெபியில் போடப்பட்டாலும் சிங்கம் என்னைச் சேதப்படுத்தாமல், ஆண்டவர் என்னை வெளியே கொண்டு வருவார் என்று விசுவாசித்தார். அவருக்குத் தேவன் மேல் இருந்த விசுவாசத்தினால் தான் தேவன் அவரோடுகூட இருந்து நடத்தினார். நீங்களும் ஆண்டவர் மேல் விசுவாசம் வைக்கும்போது உங்களால் வெற்றிபெற முடியும். இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தால் நீங்கள் வெட்கப்பட்டு போகமாட்டீர்கள். மனிதர்களை நம்பி, சுயபலத்தை நம்பி ஏமாற்றப்பட்டு விடாமல், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின ஆண்டவர் மேல் விசுவாசம் வைக்கும்போது உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதத்தையும், உயர்வையும் நீங்கள் காண்பீர்கள்.

**விசேஷித்த ஆவி:** தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை அவருக்குக் கொடுத்து (தானியேல் 6:3) அந்த ஆவியானவர் மூலமாய் பெலப்படுத்தி நடத்தினார். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்போது அவரது ஞானம் உங்களை ஆட்கொள்ளும். பரிசுத்த ஆவியானவர் நடக்க வேண்டிய வழியைக் காண்பித்து, நீங்கள் என்ன படிக்க வேண்டும், எப்படி படிக்க வேண்டும், எதிர் காலம் என்ன என்பதை விளங்கப் பண்ணுவார். பரிசுத்த ஆவியானவருக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் கொடுங்கள்.

இந்தக் குணநலன்கள் எல்லாமே தானியேலுக்குள் காணப்பட்டதால் தான் அவரால் ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடிந்தது (தானியேல் 6ம் அதிகாரம்).

*அன்பான மகனே(ளே), உங்கள் தோல்வியை ஜெயமாக மாற்ற, ஏமாற்றங்களை ஆசீர்வாதமாக மாற்ற இயேசுவால் முடியும். இன்றைக்கு தேர்வைக் குறித்த பயத்தோடு, நம்பிக்கை இழந்து போய் இருக்கிறீர்களா? உங்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையைக் கொடுத்துப் புதிய ஆரம்பத்தை உங்கள் வாழ்க்கையில் அவரால் உண்டாக்க முடியும். தோல்வி, ஏமாற்றங்கள், நீங்கள் எதிர்பார்த்த மார்க் கிடைக்கவில்லை, எனக்கு இந்தப் பாடம் கஷ்டம், நான் ஏழைக் குடும்பம், பண வசதி கிடையாது, ஆள் வசதி கிடையாது என மனசோர்வுடன் இருக்கிற உங்களைப் பார்த்துதான் சொல்கிறார். எல்லாவற்றையும் இழந்து ஒரு அடிமையாய் வந்த வாலிபனை ஒரு தேசத்தில் அதிகாரியாக உயர்த்தக் கூடுமானால், உங்களை அவரால் உயர்த்த முடியும். உங்கள் குடும்பத்தை அவரால் உயர்த்த முடியும்.*

பிள்ளைகளே, உங்களை ஜெயித்து சாதிக்கிறவர்களாக மாற்ற ஆண்டவர் வல்லமை உள்ளவராக இருக்கிறார். இதுவரைக்கும் நீ எப்படி இருந்தாலும் பரவாயில்லை; நண்பர்களோடு இணைந்து தவறான பழக்கங்களில் ஈடுபட்டு உன் படிப்பைக் கெடுத்து, நேரத்தை விணாக்கி, சமூக வலைத்தளங்கள் மூலம் ஏற்பட்ட தொடர்புகளினால் உன் வாழ்க்கையை அழித்து உன் பரிசுத்தம் பாதிக்கப்பட்டுவிட்டதினால் உன்னால் படிக்க முடியாமல், சாதிக்க முடியாமல் உனக்குள் பல போராட்டங்களோடு இருக்கிற நீ, இன்றைக்கு உன் வாழ்க்கையை என்னிடத்தில் கொடு என்று இயேசு கேட்கிறார். உன் வாழ்க்கையை அவரிடத்தில் கொடுத்தால் போதும், உன்னைச் சாதனையாளனாக, ஜெயம் பெற்றவனாக / ஜெயம் பெற்றவளாக மாற்றுவேன் என்று இயேசு சொல்கிறார். இன்றைக்கு உன்னை அர்ப்பணித்து ஒப்புக்கொடு. உன் வாழ்க்கையும் தானியேல் போல் ஜெயமுள்ள, ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையாக அமையும். நீ வெற்றி பெறுவது நிச்சயம்...! ■

# ஆசரிப்பு கூடாரம்

தகவல்: மோசஸ்



அன்பு வாலிபர்களுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம், ஆசரிப்பு கூடாரம் எவ்வாறு கட்டப்பட்டது, அதன் அமைப்பு, உள்ளமைப்புகள் மற்றும் அளவுகள் குறித்து நாம் அறிந்துகொண்டோம். இந்த மாதம், அதன் முக்கிய பகுதியான பரிசுத்த ஸ்தலத்தைப் பற்றியும், அதில் உள்ளவைகளைப்பற்றியும் அறிந்துகொள்வோம் வாருங்கள்.

## பரிசுத்த ஸ்தலம்

பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முதலில் முதலாம் திரையைக் கடக்க வேண்டும். ஆசரிப்பு கூடாரத்தின் வாசலைப் போலவே, இந்தத் திரையும் நீலம், சிவப்பு, இரத்தாம்பரம் ஆகிய நிறங்களில் சித்திர வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டது. இதில் லேவியர்கள் நுழைய அனுமதிக்கப்படவில்லை; நுழைய முயன்றால் அவர்கள் மரிப்பது நிச்சயம். தெரிந்து கொள்ளப்பட்ட ஆசாரியர்கள் மட்டுமே இதில் நுழைய அனுமதி உண்டு (யாத். 26:36).



### சமூகத்து அப்பங்களும் மேஜையும்

பரிசுத்த ஸ்தலத்தில் நுழைந்தவுடன், வலது புறம் வடக்கு பக்கத்தில் சமூகத்து அப்பங்களுக்கான மேஜை இருக்கும் (யாத். 37:10-16). இது சித்தீம் மரத்தால் செய்யப்பட்டு, பொன் தகட்டால் மூடப்பட்டிருக்கும்.

- மேஜையின் மீது 12 புளிப்பில்லாத அப்பங்கள் வைக்கப்படும் – ஒருபுறம் 6, மறுபுறம் 6.
- இவை பரிசுத்தமானவை; ஆசாரியர்களால் மட்டுமே உணவாக உட்கொள்ள அனுமதி உண்டு (லேவி. 24:9).
- இந்த அப்பங்கள் ஏழு நாட்களுக்கு ஒருமுறை மாற்றப்பட வேண்டும்.

### பொன் குத்துவிளக்கு

மேஜைக்கு எதிராக, இடது புறத்தின் தெற்கே பொன் குத்துவிளக்கு இருக்கும் (யாத். 37:17-21).

- முழுவதும் மூடப்பட்ட ஆசரிப்பு கூடாரத்திற்குள் சூரிய ஒளி புகுவதில்லை; எனவே பரிசுத்த ஸ்தலத்தில் இந்தக் குத்துவிளக்கின் ஒளியே பிரதானமாக இருக்கும்.
- இது ஒரே தண்டிலிருந்து உருவாக்கப்பட்டு, 7 அகல்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது – மூன்று

கிளைகள் வலப்புறம், மூன்று கிளைகள் இடப்புறம், நடுவில் ஒன்றுமாக இருக்கும்.

- இந்த விளக்கு எப்போதும் எரிந்து கொண்டே இருக்க வேண்டும்.
- பிரதான ஆசாரியன் எண்ணெய் வார்த்து, திரிகளை மாற்றிப் பராமரிப்பார்.

## தூபப் பீடம்

பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள தூபப்பீடம் மரத்தால் செய்யப்பட்டு, பொன் தகட்டால் மூடப்பட்ட ஒரு சிறிய பீடம். இது பொற்பீடம் என்றும் அழைக்கப்படுகிறது (யாத். 40:26,27).

- ஆசாரியன் இதில் தூபம் எரித்து, அதிலிருந்து எழும் சுகந்த வாசனையான புகையால் பரிசுத்த ஸ்தலம் நிரம்பும்.
- பிறகு மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு நுழைய, பிரதான ஆசாரியர் இந்தத் திரையைக் கடந்து செல்ல வேண்டும்.

## பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையேயான திரை



பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தை பிரிக்கும் இரண்டாவது திரை ஆகும்.

- இது இளநீல நூலாலும், திரித்த மெல்லிய பஞ்சு நூலாலும் செய்யப்பட்டு, மிகக் கனமாகவும் தடியாகவும் உருவாக்கப்பட்டது.
- இதுவே எருசலேம் தேவாலயத்தில் காணப்பட்ட திரையாகும்.
- இயேசு சிலுவையில் மரித்தபோது, மேலிருந்து கீழாக இந்தத் திரை கிழிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு நுழைவது எப்படி?

- வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே, பிரதான ஆசாரியன் பாவ நிவாரண பலியாக வெள்ளாட்டின் இரத்தத்தை கிருபாசனத்தின் மீது தெளிக்க அனுமதிக்கப்படுவார் (யாத் 26:31-33).
- சரியான ஆயத்தம் இல்லாமல், தேவன் விதித்த ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்காமல் இந்தத் திரையைக் கடந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு சென்றால், ஆசாரியன் உடனே மரணமடைவார்.

**என்ன பிரண்ட்ஸ், ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பொருட்கள், அவற்றின் பயன்பாடு ஆகியவற்றைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருப்பீர்கள்.**

அடுத்த மாதம், மகா பரிசுத்த ஸ்தலம் – அதில் உள்ள பொருட்கள், அங்கு நடைபெறும் விசேஷ நிகழ்வுகள் ஆகியவற்றைப் பற்றி ஆழமாக அறிந்து கொள்ளலாம்...

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும் Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 30th MARCH
Time: 3:00 PM - 5:00 pm
IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH

உண்மை சம்பவம்: கமல் எபனேசர்






# கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள்!

**கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள் என்ற தலைப்பில் இந்த மாதம் நாம் அப்போஸ்தலனாகியப் பவுலைக் குறித்து தியானிக்க இருக்கிறோம். கடந்த மாதம் நாம் தியானித்த ஸ்தேவானின் மரணம் அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையின் மாற்றத்திற்கு ஓர் அடித்தளமாக அமைந்தது. நாமும் கிறிஸ்துவுக்காக நிலைத்திருக்கும்போது, அதைக் காண்கிறவர்கள், கிறிஸ்துவுக்காக நிலைத்திருக்க நம்முடைய வாழ்க்கை அவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும். மற்ற விசுவாசிகளுக்கு நாம் மாதிரியாக இருப்போம் (1 தீமோத்தேயு 4:12).**

அப்போஸ்தலனாகிய பவுலை இயேசு சந்தித்தபோது, அவர், "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாய் இருக்கிறீர்?" என்று கூறி, தன் வாழ்க்கையையே முழுமையாக அர்ப்பணித்தார். தன் வாழ்க்கையில் அவர் பெற்றிருந்த எல்லா மேன்மைகளையும் வெறும் குப்பையாக எண்ணினார் (பிலிப்பியர் 3:11). கிறிஸ்துவை பிரியப்படுத்துவதே தன் வாழ்க்கையின் குறிக்கோளாக வைத்திருந்தார்.

கிறிஸ்துவுக்காக நிலைத்திருந்த ஒவ்வொரு சீஷர்களும் இந்த உலகத்தின் மேன்மைகளையும், உலகத்தின் அந்தஸ்துகளையும் குப்பையாக நினைத்தார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மோசேயும் கூடப் பார்வோனின் மகன் என்று எண்ணப்படுவதை வெறுத்து, தேவ ஜனங்களோடு பாடுபடுவதையே தெரிந்து கொண்டார் (எபிரெயர் 11:24,25). உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூர்ந்து அதைப் பற்றிக் கொள்ள விரும்புகிறவர்கள், கிறிஸ்துவுக்காக நிலைத்திருக்கிற சீஷர்களாக வாழ்ந்திட முடியாது.

அப்போஸ்தலனாகிய பவுல், தான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதினால் ஏற்பட்ட பலவிதமான நெருக்கடிகளையும், புறக்கணிப்புகளையும், காவலையும், மிலாறுகளால் அடிக்கப்படுவதையும் ஏற்றுக் கொண்டார் (2 கொரிந்தியர் 11: 24-27). கிறிஸ்துவை பிரியப்படுத்தினால் மட்டும் போதும் என்று தீர்மானித்தவராக, மரணமே ஆனாலும், அதற்கும் அவர் பயப்படாதவராகத்தான் இருந்தார்.

***நாமும் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல, உலகத்தின் மேன்மையை குப்பையாய் எண்ணுகிறவர்களாக, கிறிஸ்துவுக்காக நிந்தைகளையும், புறக்கணிப்புகளையும் ஏற்றுக் கொள்வோம். இயேசு கிறிஸ்துவின் மீது அன்பு கொண்டவர்களாக, அவருக்காக நிலைத்து நிற்கிற சீஷர்களாக வாழ்ந்திட நம்மை அர்ப்பணிப்போம். தேவ கிருபையினால், பரிசுத்த ஆவியானவரின் பெலத்தால் நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்காக நிலைத்திருக்க ஜெபித்திடுவோம்...!***

தகவல்: டியூக் ரிச்சர்ட்



# இது இல்ல Trendu...!

ஹலோ பிரண்டஸ் எப்படி இருக்கீங்க? இப்ப இருக்கிற டிரண்டல ட்ரெண்டியா ஓடிட்டு இருக்கீங்களா? இந்த வருடம் நாம் I தீமோத்தேயு 4:12லுள்ள வசனத்தை மையமாக வைத்துக் கிறிஸ்தவ வாலிபர்கள் மற்றவர்களுக்கு எப்படி முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று பலகாரியங்களை ஆராய்ந்து கொண்டு வருகிறோம். கடந்த மாதம் "வார்த்தையில்" எப்படி மாதிரியாய் இருக்க வேண்டும் என்று தியானித்தோம். இந்த மாதம் நடக்கையில் எப்படி மாதிரியாய் இருப்பது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

## நடக்கையில் மாதிரி

**"வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி"** (பிரசங்கி 11:9). Youth Stage வந்தாலே நம்மள எல்லாரும் பாக்கணும், நாம செய்றதை எல்லாரும் பாராட்டணும், நாமதான் ஹீரோ, ஹீரோயின்னு காண்பிக்கணும், என்று இன்னும் பல காரியங்கள் நமக்குள் தோன்றுகிறது தான். உங்களது ஏக்கம் எதிர்பார்ப்பு எல்லாம் நியாயம்தான்; ஆனால் அதினால் உண்டாகும் பின் விளைவுகளையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக இன்றைய வாலிபர்கள் மத்தியில் டிரண்டியா இருக்கிற காரியம் என்னன்னா (fashionable clothing) போடுகிற உடை. அது மத்தவங்கள கவருகிற வண்ணமா இருப்பதுதான்! நீங்க modernஆ உடுத்திக் கொள்வது தப்பு கிடையாது. ஆனால் அது modestஆ இருக்கணும்னுதான் ஆண்டவர் எதிர்பார்க்கிறார். நம்முடைய நடை, உடை, பாவனை எல்லாம் கிறிஸ்துவை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். நாம் அணியும் உடையின் நிமித்தமோ நம்முடைய செயல்களின் நிமித்தமோ மற்றவர்களை இடறப்பண்ணி பாவம் செய்யத்தூண்ட கூடாது.

எனக்குப் பிரியமான கர்த்தருடைய பிள்ளைகளே! ''எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு; ஆனால் எல்லாம் எனக்குத் தகுதியாய் இராது" என்று பவுல் எழுதுகிறார். Fashion என்கிற பெயரில் நாம் செய்கிறதான சேட்டைகள் நம்முடைய எதிர்காலத்திற்கு பின் விளைவைக் கொண்டு வந்து விடும். வாலிப வயதில் நண்பர்கள் தான் உலகம் என்று தோன்றும். ஆனால் நாம் எப்படிப்பட்ட friendship வைத்திருக்கிறோம் என்பது ரொம்ப முக்கியம். என் Friends குடிக்கிறாங்க; நானும் குடிக்கிறேன், என் Friends டாட்டூஸ் போடறாங்க; நானும் போடறேன், என் Friends பியர்சிங் பண்றாங்க; நானும் சரீரத்துல பண்றேன் என்றால் அது தவறு. அவர்கள் உலகத்தார், நாமோ தேவனுடைய ஆலயம். இந்தச் சரீரம் தேவனுடைய ஆலயம். ஒருவன் இந்தச் சரீரத்தை கெடுத்தால் தேவன் அவனைக் கெடுத்து போடுவார் என்று வேதம் சொல்கிறது.

**அன்பான வாலிபர்களே! உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது (1 பேதுரு 1:15). அனுதினமும் நீங்கள் ஜெபம் பண்ணி வேதத்தைத் தியானிக்கும்போது கர்த்தர் உங்களைப் பரிசுத்தமாக்குவார். நீங்கள் கர்த்தருக்கு எனத் தனிப்பட்ட டிரெண்டை உருவாக்குங்க! நம்மைக்கொண்டு அநேகர் ஆசீர்வதிக்கப்படுவார்கள். நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருந்து அவருடைய மாதிரியைப் பின்பற்றினால் நம் மூலமாகத் தேசத்துக்கு நன்மை பிறக்கும், கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்.**



**ஆகவே நம்முடைய நடக்கை கிறிஸ்துவுக்கு பிரியமானதாக இருக்கிறதா, கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறதா அல்லது நம்முடைய நடக்கையின் மூலமாகக் கிறிஸ்து தூசிக்கப்படுகிறாரா என்று கொஞ்சம் சிந்தித்து பார்த்து நம்முடைய நடக்கையை ஜாக்கிரதையாகக் காத்துக் கொள்வோம். கண்டிப்பாகக் கிறிஸ்து உங்களோடு கூட இருந்து, உங்களுடைய வாழ்க்கையை மேன்மைப்படுத்துவார் ■**

முகப்பு செய்தி: சதீஷ்



# உயர பறந்திடு

**இன்றைய உலகில் காத்திருப்பது என்பது மிகவும் கடினமான செயலாகத்தான் தெரிகிறது. ஆனால் நம்முடைய வாழ்க்கையில் தரிசனங்களும் திட்டங்களும் நிறைவேற வேண்டுமானால் காத்திருப்பது மிகவும் அவசியம். கழுகு சராசரியாக 70 ஆண்டுகள் வரை வாழக்கூடியது. தன்னுடைய வாழ்நாளில் 40 வயது வரும்போது கழுகின் நகங்கள் வயதாகத் தொடங்கி இரையை பிடிக்க முடியாது. மேலும் தன்னுடைய இறகுகள் கனமாகி பறக்கக் கடினமாக இருக்கும். இந்நிலையில் மீண்டும் தன்னுடைய பழைய நிலைமைக்குத் திரும்பி உயர பறக்க மலை முகடுகளில் போய்ப் புதிய அலகுகள், புதிய நகங்கள், புதிய இறகுகள் வளரக் காத்திருக்கும். இந்தக் காத்திருப்பு நேரம் கழுகுகளுக்கு மிகுந்த வலிகளைக் கொடுக்கும். அதை எல்லாவற்றையும் சகித்து காத்திருக்கும்போது மட்டும்தான் கழுகு புதுப்பெலனைப் பெற்று மீண்டும் உயரப் பறக்க முடியும்.**

உங்களது வாழ்விலும் தேவனுடைய திட்டங்களும் தரிசனமும் நிறைவேற வேண்டுமானால், உங்கள் முன் இருக்கும் சவால்கள், பாடுகள், நிந்தனைகள், அவமானங்கள் இவையெல்லாவற்றையும் சகித்து ஆண்டவரின் வேளைக்காகக் காத்திருக்கும்போது, அவர் உங்களை நிச்சயம் உயர்த்துவார். காத்திருக்கிற நேரம் என்பது வீணான நேரம் அல்ல, தேவன் உங்களை உருவாக்குகிற நேரம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆண்டவர் தன்மீது வைத்திருந்த திட்டம் நிறைவேற யோசேப்பு ஏறக்குறைய 13 ஆண்டுகள் காத்திருந்தான். இந்நாட்களில் அவன் எத்தனையோ பாடுகளை சகித்தான். எதிர்காலத்தைக் குறித்து பெரும் கனவுகளோடு இருந்த



யோசேப்பிற்கு அவனுடைய வாழ்க்கையில் எல்லாமே எதிர்மறையாகத்தான் இருந்தன. ஆதரிக்க வேண்டிய குடும்பத்தாரே அடிமையாக விற்று விட்டனர். அதுமட்டுமின்றி எகிப்தில் எவ்வளவு அவமானங்கள், ஏமாற்றங்கள் இவை எல்லாவற்றிலேயும் அவன் சோர்ந்து போகவில்லை, மனமுறிவு அடையவும் இல்லை. தேவன் அவன்மீது வைத்திருந்த தரிசனமும் திட்டங்களும் நிறைவேற எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்தான். அவனுடைய காத்திருப்பு வீண் போகவில்லை. ஏற்றவேளையில் கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றி எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக உயர்த்தினார்.

ஆண்டவர் உங்கள்மீது வைத்திருக்கும் திட்டங்கள் நிச்சயம் ஒருநாள் நிறைவேறும். காத்திருங்கள், சோர்ந்து போகாதீர்கள், ஏனெனில் **“கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.”** (ஏசாயா 40:31). யோசேப்பு கர்த்தரின் வேளைக்காகக் காத்திருந்தது மட்டுமல்லாமல் அவர் என்னை உயர்த்துவார் என்ற நம்பிக்கையோடு இருந்ததால், அவன் தேவனால் உயர்த்தப்பட்டான். காத்திருந்த நாட்களில் அவன் கர்த்தருக்குள் தன்னை பெலப்படுத்திக் கொண்டு, தேவ திட்டத்தை நிறைவேற்றினான். ஆண்டவர் உங்கள்மீது வைத்த தரிசனமும் திட்டமும் நிறைவேறவில்லை என்று கலங்காதீர்கள். கர்த்தருக்குள் உங்களைப் பெலப்படுத்தி அவருடைய வேளைக்காகக் காத்திருந்து உங்களை அவர் உருவாக்க ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் நிச்சயம் உங்களையும் கழுகைப் போல உயர எழும்பிப் பறக்கச் செய்வார்.



இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும்படி தேவன், சவுல் மீது பெரிதான தரிசனமும் திட்டமும் வைத்திருந்தார். ஆனால் சவுல் இராஜாவோ ஆண்டவர் தன் மீது வைத்திருந்த தரிசனத்தை புரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு, **“சர்வாங்கதகனபலியையும் சமாதானபலிகளையும் என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்று சொல்லி, சர்வாங்கதகனபலியைச் செலுத்தினான்”** (1 சாமு. 13:9). இதனால் ஆண்டவர் சவுல் மீது வைத்திருந்த தரிசனத்திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தாவீதை தெரிந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. உங்கள்மீது தேவன் வைத்திருக்கும் திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால் பொறுமையுடன் ஆண்டவரின் வேளை வரும் வரைக் காத்திருக்க வேண்டும்.

**எனக்கன்பான வாலிபர்களே, உங்களைச் சுற்றி எவ்வளவு போராட்டகளும், நெருக்கங்களும் வந்தாலும் பொறுமையுடன் காத்திருக்கும்போது கர்த்தர் உங்களோடு இருந்து நிச்சயம் உயர்த்துவார். எனவே சூழ்நிலைகளைக் கண்டு மனம் தளராமல் யோசேப்பை போலக் கர்த்தருடைய வேளைக்காகக் காத்திருங்கள். அவர் உங்களை உயர்த்துவதை பார்ப்பீர்கள்...!**

கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

# பரபரப்பு செய்திகள்

Hi friends, எல்லாரும் சந்தோஷமா இருக்கீங்களா? பரப்பரப்பு செய்திகள் என்னும் இத்தொடரில் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

SENSATIONAL NEWS!

**இந்த மாதம் ஒரு Special மாதம் என்றே சொல்லலாம். என்ன Specialன்னு கேக்கிறீங்களா? 'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்ற பாரதியாரின் வரிகளுக்கேற்ப மங்கையராய் பிறந்து நற்குணம் என்னும் வாகை சூடி, அன்பு, சந்தோஷம் என்னும் மலர்களின் மணங்களை பரவச் செய்கின்ற பெண்களைக் கொண்டாடும் மாதம். எனவே இந்தத் தொடரைப் படிக்கின்ற அனைத்து பெண்களுக்கும் எனது பெண்கள் தின நல்வாழ்த்துக்கள்!**

இது பெண்கள் மாதம் என்பதினால், இரண்டாயிரம் வருடத்திற்கு முன்பு இரண்டு பெண்களின் வாழ்க்கையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட, உலகமே திரும்பிப் பார்க்கக்கூடிய அளவு நடந்த ஒரு அற்புதத்தைப் பற்றிப் பார்க்கலாமா? பெத்தானியா என்னும் கிராமத்தைச் சார்ந்த மார்த்தாள், மரியாள் என்னும் இந்த 2 சகோதரிகளுக்கு லாசரு என்னும் சகோதரன் இருந்தான். இவர்களுக்குப் பெற்றோர் இல்லை. இயேசு இந்தக் குடும்பத்தை மிகவும் நேசித்தார். ஒருநாள், இவர்களுக்கு ஒரு இக்கட்டு வந்தது. தங்களால் செல்லமாய் வளர்க்கப்பட்ட சகோதரனாகிய லாசரு என்பவர் வியாதி படுக்கைக்குள்ளாகவே, இந்தச் செய்தி இயேசுவிற்கு சொல்லப்பட்டது. அந்த இரண்டு சகோதரிகளும் எப்படியாவது இயேசு வந்து சகோதரனைக் குணமாக்கி விடுவார் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இயேசுவோ நான்கு நாட்கள் கழித்து லாசருவைப் பார்க்கப் பெத்தானியா கிராமத்திற்கு சென்றார். அப்போது லாசரு மரித்திருந்தார். அந்த இரண்டு பெண்களும் கண்ணீருடன் நிற்கவே, இயேசுவோ லாசரு இருந்த கல்லறையின் கல்லைத் திறக்கச் சொல்லி 'லாசருவே வெளியே வா' என்று கூப்பிட்டார். லாசரு மீண்டும் உயிரோடு திரும்பி வந்தார்.








**இது எல்லாருக்கும் தெரிஞ்ச ஒரு அற்புதம் தானே இதை ஏன் சொல்றீங்கன்னு நினைக்கிறீர்களா? இந்த அற்புதத்தை வேதத்தில் வாசிக்கும் போதே எவ்வளவு Stunning ஆக இருக்கு friends... நம்ம இருக்கிற இந்த காலத்துல இதே மாதிரி அற்புதங்கள் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னா நம்புவீங்களா?**

நமக்கு **Recent**ஆ அமெரிக்காவிலிருந்து ஒரு பரபரப்பான செய்தி கிடைத்துள்ளது. அமெரிக்காவில் உள்ள **Texas** மாகாணத்தில் உள்ள ஒரு மருத்துவமனையில் ஜெரேமி என்ற வாலிபர் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். இவர் இயேசுவை மிகவும் நேசித்து, அவரை விசுவாசிப்பவர். ஒருநாள் மாரடைப்பு ஏற்பட்டு பேச்சு மூச்சு அற்று இருந்த ஒரு நபரை ஜெரேமியின் மருத்துவக் குழுவிடம் சிலர் அழைத்துக் கொண்டு வந்தனர். ஜெரேமியும் அவரது மருத்துவக் குழுவும் அந்த நபரைக் காப்பாற்ற **cpr, shock treatment, compressions** போன்ற பல முயற்சிகளைத் தீவிரமாகச் செய்தனர். கிட்டத்தட்ட 25-30 நிமிடங்கள் போராடியும் பலனில்லை. அந்த நபரின் இருதயம் துடிக்க மறுத்தது. **Pulse** இல்லை. அவர் மரித்ததைக் கண்ட மருத்துவர்கள் முயற்சியைக் கைவிட்டு, மரணத்திற்கான **Report** எழுதத் தயாராகினர். ஆனால், ஜெரேமியிடம் ''நீ இவருக்காக ஜெபி'' என்று ஆண்டவர் பேசினார். அந்த நபருக்கு **Compression** செய்து கொண்டிருந்த ஜெரேமி, அதே நிலையில் விசுவாசத்துடனும், மரணத்தை எதிர்த்து ''மரணமே இந்த நபர் மீது உனக்கு அதிகாரம் இல்லை'' என்றும் 'இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இவருடைய ஜீவன் திரும்பி வருவதாக' என்று அதிகாரத்துடனும் ஜெபித்தார்.

என்ன ஆச்சரியம்! மருத்துவர் ஜெரேமியின் கைகள்மீது மின்சாரம் போன்று தேவனுடைய வல்லமை பாய்ந்து, மரித்துக்கிடந்த அந்த நபருக்குள் சென்றது. அடுத்த வினாடியே அந்த நபரின் இருதயம் துடிக்க ஆரம்பித்தது.





**Pulse rate** அதிகரிக்க ஆரம்பித்தது. அவருடைய ஜீவன் அவருக்குள் வந்தது.

நாம் ஆராதிக்கும் இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார் என்பதற்கு இந்த அற்புதம் ஒரு மிகப்பெரிய சான்று.

பார்த்தீங்களா **friends**, எல்லாமே முடிந்தது; இனி சாத்தியமே இல்லை என்ற சூழ்நிலையைத் தேவனுடைய வல்லமை சாத்தியமாக்கியது. ஒருவேளை நீங்களும் இப்படிப்பட்ட சூழ்நிலைக்குள் கடந்து செல்வீர்கள் என்றால் மருத்துவர் ஜெரேமியைப் போல விசுவாசத்துடன் சூழ்நிலையைப் பார்த்துப் பேசுங்கள். அற்புதத்தைக் காண்பீர்கள்.

**வாலிபனாகிய ஜெரேமி என்னும் மருத்துவரை ஆண்டவர் பயன்படுத்தியது போல, இன்று வாலிபர்களாகிய நம்மையும் பயன்படுத்த விரும்புகிறார். அதற்கு ஜெரேமியைப் போல விசுவாசமும், ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்கும் பழக்கமும் நமக்கு வேண்டும். உலக சத்தங்கள் நமக்குள் அதிகரிக்கும்பொழுது ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்க இயலாது. எனவே உலக காரியங்களைத் தள்ளிவிட்டு, இயேசுவிற்கு முதலிடம் கொடுத்து அவரோடு இணைந்திருப்போம். நம் கைகளைக் கொண்டும் மரித்தவரை உயிரோடு எழுப்பத் தேவன் Readyயாக இருக்கிறார்! என்னங்க நீங்க Readyயா?** ■




தகவல்: எப்சிபா

**எப்சி:** Hi தேவா, Hi பிரியா புது வருஷ தீர்மானத்தின்படி ஒழுங்கா Bible வாசிச்சீங்களா? நான் காலைல அப்போஸ்தலர் 20 ஆம் அதிகாரம் வாசிச்சேன்.

**தேவா:** Hi பா, நானும் வாசிச்சேன், ஆமா இந்த ஐத்தீகு கீழே விழுந்து, திரும்ப உயிரோட வந்தது. அதிசயம் தான்.

**பிரியா:** ஆமா, பின்ன? பவுல் நடுராத்திரி வரைக்கும் பிரசங்கம் பண்ணா தூக்கம் வரத்தானே செய்யும்...

**தேவா:** நல்லவேளை, இப்பல்லாம் அப்படியில்ல... எங்க Church Service-ல 1 hour தான்... மிஞ்சி மிஞ்சிப் போனா 1½ மணி நேரம் அவ்ளோ தான்....



**எப்சி:** ம்க்கும்... ரொம்ப பெருமை... ஒரு 30, 40 years back Sundayன்னா விசுவாசிகள் எல்லாரும் Church-ல தான் இருப்பாங்க... Service மட்டுமே 3-5 hours நடக்கும்... அப்புறம் அங்கேயே சாப்ட்டு, church clean பண்ணிட்டு அந்த நாள் full ஆவே தேவ சமூகத்தில Spend பண்ணாங்க... அந்தச் சந்தோஷம், அந்த fellowship எப்படி இருந்திருக்கும்?

**தேவா:** ஆமால்ல? அதுனால தான் தாவீது, ‘‘உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு’’ அப்டின்னு சொல்றாரோ?

**ப்ரியா:** ச்சே... அந்தக் காலத்து கிறிஸ்தவர்களுக்கும் நமக்கும் எவ்ளோ விததியாசம்??

**எப்சி:** ஆமாப்பா! இப்போ பாருங்க sunday serviceக்கு வேண்டா வெறுப்பா போறோம், அதுவும் 9 மணிக்கு churchன்னா 10 அல்லது 10.30 மணிக்குப் போறது, மெசேஜ் கொடுத்திட்டிருக்கிறப்பவே எந்திரிச்சு phone பேசிட்டே வெளிய போறது, காணிக்கை போட்டவுடனே கௌம்புறது, பாஸ்டர் கொஞ்சம் lateஆ service முடிச்சா அவரை மெரட்டுறது, transfer பண்றது ன்னு பல சேட்டைகள பண்ணிட்டு இருக்கோம். இன்றை கிறிஸ்தவர்கள்.

**“கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்” அப்டின்னு தாவீது சொல்றத போலத் திரும்பவும் நாம் தேவ சமூகத்தில, தேவாலயத்தில எப்போ அதிக நேரம் spend பண்ண ஆசையா போகப் போறோம்?** ■



# Achievers
## 2025



## தேர்வு எழுதும் மாணவ-மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை

கடந்த ஜனவரி மாதம் 26ஆம் தேதி நாலுமாவடியில் **Achievers** கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். பயத்தோடு, கலக்கத்தோடு தேர்வை எதிர்பார்த்திருந்த மாணவ, மாணவியர் இக்கூடுகையில் கலந்து கொண்டு பயங்கள் நீங்கி, கலக்கங்கள் மாறிப் புதுநம்பிக்கைப் பெற்று கடந்து சென்றனர். வந்திருந்த சுமார் **3000** மாணவ, மாணவியர்களுக்கும் தேவன் மெய்ஞானத்தைக் கொடுத்து அனுப்பினார். கடந்த வருடங்களில் **Achievers** கூடுகையில், நம்பிக்கை இழந்து வந்த ஒவ்வொருவருக்கும் நம்பிக்கைக் கொடுத்து, வெற்றியைக் கொடுத்த தேவனுக்கு சாட்சி சொல்லி அவர் நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். அவர்களின் சாட்சிகள் வந்திருந்த அநேகருக்கு புதிய நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளித்தது. இதில் சகோதரர் மோகன் சி.லாசரஸ் அவர்கள் செய்தி கொடுத்து ஜெபித்தார்கள். டாக்டர் அன்புராஜன் அவர்கள் மருத்துவ ஆலோசனையும், சகோதரர் கென்னடி அவர்கள் தேர்வுக்கு ஆயத்தமாவது எப்படி என சில ஆலோசனைகள் கொடுத்தார்கள். வந்திருந்த ஒவ்வொருவரும் புதுபெலன் பெற்று நம்பிக்கையோடு கடந்து சென்றார்கள். தேவனுக்கே மகிமை!


















Seeds of Revival

# எழுப்புதலின் விதைகள்!



## தாவீது சுந்தரானந்தம்

கடைசிகால எழுப்புதலில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் வாலிபர்களே! அன்றைய மிஷனெரிகளின் தியாகம் மற்றும் அவர்களது அர்ப்பணிப்பின் வாழ்க்கை, அவர்கள் போன இடமெல்லாம் பெரும் தாக்கத்தை உண்டாக்கியது. தங்க இடமின்றி, சரியான உணவின்றி, கால சூழ்நிலைகளை சகித்து, மொழிகளைக் கற்றுக்கொண்டு, காடுகள்,







மலைகள், வனாந்திரம் என்று பல கடினமான பாதைகளில் கிறிஸ்துவின் அன்பின் நிமித்தம் வரும் இன்னல்களைச் சந்தித்து, அவமானத்தைச் சகித்து பின்நோக்காமல் இரத்த சாட்சிகளாக மடிந்தனர். கடந்த மாதம் ஹென்றி மார்ட்டின் அவர்களின் மிஷனெரி பயணத்தைக் குறித்து அறிந்து கொண்டோம். இந்த மாதம் தமிழ்நாட்டை சேர்ந்த தாவீது சுந்தரானந்தம் அவர்களைப் பற்றிப் பார்க்கலாம்.

தாவீது சுந்தரானந்தத்தின் இயற்பெயர் சின்னமுத்து. இவர் திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளம் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் 1771ம் ஆண்டு பிறந்தார். இவர் சிறுவனாய் இருக்கும்போது திடீரென்று ஏற்பட்ட நோயினால் பெற்றோர்கள் மரித்துப்போனார்கள். தனது 17வது வயதில் இவர் விஜயராமபுரம் கிராமத்தைவிட்டு வெளியேறிச் சாத்தான்குளம் வரை நடந்துசென்று அங்கிருந்து கருப்புகட்டி ஏற்றிச் சென்று கொண்டிருந்த மாட்டு வண்டியில் இராஜபாளையம் சென்று, அங்கிருத்து தஞ்சாவூர் சென்ற இவர் ஒரு கடையில் வேலைக்குச் சேர்ந்தார். அப்பொழுது ஒருநாள் குருவானவர் **கிறிஸ்டியான் பிரடெரிக் ஸ்வாட்ஸ்** ஐயர் அவர்கள் தெருக்களில் நின்று செய்த நற்செய்தி பணியினால் கவரப்பட்ட இவர், இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்பட்டு, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, 1790ம் ஆண்டு தாவீது சுந்தரானந்தம் என்ற பெயரில் ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டார்.

பின்னர் தாவீது சுந்தரானந்தம் விசுவாசத்தில் பலப்பட்டு கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகனாய் செயல்பட தன்னை அர்ப்பணித்தார். ஸ்வார்ட்ஸ் ஐயர் தான் செல்லும் இடமெல்லாம் தாவீது சுந்தரானந்தத்தை தன்னோடு அழைத்துச் செல்வார்.

தாவீது சுந்தரானந்தம் தன் சொந்த ஊரில் வந்து கிறிஸ்துவின் நற்செய்தி பணியை அறிவித்தார். இதனால் விஜயராமபுரத்தில் இவருடைய குடும்பத்தினரை சேர்ந்த 18 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்கள் ஆண்டவரை ஆராதிக்க ஆலயம் தேவை என்பதால், பனை ஓலையினால் செய்யப்பட்ட கூரை ஆலயம் ஒன்று கட்டப்பட்டது. தாவீது சுந்தரானந்தம் அவர்கள் சாத்தான்குளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் நற்செய்திபணி செய்ய ஆரம்பித்தார். இதனால் பலர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். இதனால் 1797ம் ஆண்டு அக்டோபர் மாதம் சண்முகபுரத்தை சேர்ந்த 40 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஆகவே அவர்கள் ஆண்டவரை ஆராதிப்பதற்கு சண்முகபுரத்தில் பனை ஓலை மூலமாகக் கூரை அமைத்து ஆலயம் ஏற்படுத்தப்பட்டது. தாவீது சுந்தரானந்தம் உபதேசியார் திருநெல்வேலியின் தென் கிழக்கு பகுதிகளில் நற்செய்தி பணியை அறிவித்தார். இதன் விளைவாக அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். அங்கும் சிறிய ஆலயங்கள் கட்டப்பட்டன.



இதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், தாவீது சுந்தரானந்தனுக்கு எதிராகக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். ஆகவே ஒருசில கிராமங்களில் கட்டப்பட்ட ஆலயங்களைத் தீக்கொளுத்தினார்கள். கிராமங்களிலிருந்து கிறிஸ்தவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள், அவமானப்படுத்தப்பட்டார்கள், வாழ் வாதாரங்கள் பறிக்கப்பட்டன. உயிருக்கும், உடமைகளுக்கும் உத்திரவாதம் இல்லாமற்போயிற்று. உபத்திரவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு நிம்மதியாய் வாழ விரும்பினார்கள். எனவே கிறிஸ்தவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ஒரு நிலத்தை வாங்கி, அந்த இடத்தில் கிறிஸ்தவர்கள் குடியேற்றப்பட்டார்கள். அவர்களுக்கு ஒரு சிறிய ஜெப ஆலயமும் கட்டப்பட்டது. 1799ம் ஆண்டு சுமார் 28 கிறிஸ்தவ குடும்பங்கள் விஜயராமபுரம் மற்றும் சண்முகபுரத்தை விட்டு வெளியேறி வீடுகளைக் கட்டி குடியேறினார்கள். இது முற்றிலும் கிறிஸ்தவர்கள் அடங்கிய முதல் ஊர் என்பதினால் தாவீது சுந்தரானந்தம் அவர்களின் விருப்பப்படி அது முதலூர் என்று பெயரிடப்பட்டது. இது கிறிஸ்தவர்களுக்கு ஒரு அடைக்கலப்பட்டணமாக இருந்தது. 1800ல் முதலூர் 200 கிறிஸ்தவர்களை கொண்ட கிராமமாக உயர்ந்தது.

1801ம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் நடைபெற்ற சண்டையில், கிறிஸ்தவர்களைத் தாக்கி, அவர்கள் வீடுகளைத் தீக்கிரையாக்கி, அநேகர் கொல்லப்பட்டதோடு, முதலூர் ஆலயமும் தீக்கிரையானது. 1802ம் ஆண்டு ஏப்ரல் முதல் 1803ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு இடையே 70 கிராமங்களைச் சேர்ந்த 5382 பேர் குருவானவர் கற்பகம் சத்தியநாதன் மூலம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இக்காலகட்டத்தில் மக்கள் மத்தியில் மாபெரும் எழுப்புதல் உண்டாயிற்று. இதில் தாவீது சுந்தரானந்தத்தின் பங்கும் செயல்பாடும் அதிகமாக இருந்தது. திருச்சபை வளர்ந்து பெருகியது. எதிர்ப்பாளர்கள் கிறிஸ்தவர்களை எந்த அளவு ஒடுக்கினார்களோ அந்த அளவு கிறிஸ்தவர்கள் பெருகினார்கள்.

ஆயினும் நற்செய்தி எதிர்ப்பாளர்கள் கிறிஸ்தவர்களின் அடைக்கலப் பட்டணங்களுக்குள் புகுந்து, 1803ம் ஆண்டு மே மாதம் 22ம் நாள் முதலூர் உட்பட பல கிறிஸ்தவ கிராமங்களில் கட்டப்பட்டிருந்த ஆலயங்கள் தீக்கொளுத்தப்பட்டு, கிறிஸ்தவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பல கிராமங்கள் சூறையாடப்பட்டு, பல இன்னல்களைச் சந்தித்த போதும், கிறிஸ்தவர்கள் பின்வாங்காமல் விசுவாசத்தில் உறுதியாய் நின்றார்கள். அவர்களைத் தாவீது சுந்தரானந்தம் தைரியப்படுத்தினார்.

இதைப்பார்த்த எதிர்ப்பாளர்கள் தாவீது சுந்தரானந்தத்தை கொலை செய்வதற்கு சதி திட்டம் தீட்டினார்கள். இந்நிலையில் பெத்லகேம் என்ற கிராமத்தில் நடைபெற்று பண்டிகைக்குச் சென்றபோது, தந்திரக்காரர்களின் நயவஞ்சகமான சூழ்ச்சியினால், உண்ணும் உணவில் விஷம் வைத்துக் கொடுக்கப்பட்டது. இதை அறியாமல் உணவு உட்கொண்ட தாவீது சுந்தரானந்தம், 1806ம் ஆண்டு பெத்லகேம் என்ற கிராமத்தில் தன்னுடைய 36ம் வயதில் அகால மரணமடைந்தார். தாவீது சுந்தரானந்தம் அவர்கள் திருநெல்வேலியின் முதல் இரத்த சாட்சியாக மரித்தார்.

**இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு தம்பி, தங்கச்சி! இந்தக் காலகட்டத்தில் உனது மாவட்டத்திற்கு நீ தான் மிஷனெரி. இனி வரப்போகிற எழுப்புதலில் சுவிஷேசத்தை எடுத்துச் செல்ல ஆயத்தப்படு! உன் உத்திரவாதமும், அர்ப்பணிப்பும் திரளான ஜனங்களைக் கிறிஸ்துவண்டைக் கொண்டு வரும். இராஜாவின் பணி தீவிரமாய் பரவட்டும்!** ■



வரலாறு: சுதர்சன்





# மீண்டும் துளிர்த்த அத்திமரம்

**அன்பு நண்பர்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்...!**
**'மீண்டும் துளிர்த்த அத்திமரம்' என்கிற இந்த வரலாற்றுக் கட்டுரையின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம்.**
**அத்திமரம் அதாவது இஸ்ரவேல் தேசம் முதலில் எப்படி உருவானது என்கிற காரியத்தை இந்த மாதம் நாம் காண இருக்கிறோம்.**

விக்கிரகங்களை உருவாக்கி வழிபடுகிற ஒரு குடும்பத்தில் உள்ள ஒரு மனிதனை தேவன் தெரிந்துக் கொள்ளுகிறார். அவரோடு பேசுகிறார். நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ என்று கட்டளையும் கொடுக்கிறார். அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அந்த மனிதன்(ஆபிரகாம்) செல்கிறார் அவர் மட்டுமல்ல அவர் மனைவியும் சேர்ந்து செல்கிறார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (ஆதி 12:1).



ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும், தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்திருந்த ஜனங்களையும் கூட்டிக்கொண்டு, அவர்கள் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள் (ஆதி 12:5). அவர்கள் சென்ற தேசம் கானான் தேசம்.

இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த ஆபிராம் பின்பு தேவனால் ஆபிரகாம் என்று அழைக்கப்பட்டவர். அவருடைய மனைவி சாராய் பின்பு சாராள் என்று தேவனால் அழைக்கப்பட்டவர்.

கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான் (ஆதி 12:7).

**"நிச்சயமாகவே நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்துப் பெருகவே பெருகப் பண்ணுவேன்"** என்று வாக்கு பண்ணின கர்த்தர் இவர்களைச் சகலவித ஆசீர்வாதத்திலும் நன்மையிலும் பெருகப் பண்ணினார். வயதான காலத்தில் ஈசாக்கு என்னும் ஒரு குழந்தையையும் கொடுத்தார்.

சாராள் மரித்தபின்பு ஈசாக்கிற்கு ரெபேக்காள் என்ற மகளைத் திருமணம் முடித்து வைக்கிறார் தகப்பன் ஆபிரகாம். ஆபிரகாமின் காலத்திற்குப் பின் நீதிமானின் சந்ததியாய் இருக்கிற ஈசாக்கை கர்த்தர் ஆசிர்வதிக்கிறார். இவர்களுக்கு ஏசா, யாக்கோபு என்னும் இரட்டைக் குழந்தைகளைத் தேவன் கொடுக்கிறார். இருவரில் யாக்கோபை தேவன் தெரிந்து கொள்ளுகிறார்.



ஏசா தேவனை குறித்த அக்கறையற்ற வாழ்க்கை வாழ்கிறார். யாக்கோபு தேவனுக்கு பயந்து வாழ்கிறார் இதனால் தாய் ரெபேக்காள் யாக்கோபை சிநேகிக்கிறார். ரெபேக்காளின் விருப்பம் யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதே அதற்காக யாக்கோபுக்கு ஆலோசனைகளைக் கூறி தகப்பனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள வைக்கிறார்.

இதன் மூலம் யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் இடையே பகை உண்டானது. 'என்னை ஏமாற்றிய எத்தன் யாக்கோபை நான் கொலை செய்தே தீருவேன்' என்று ஏசா வைராக்கியத்தோடு இருக்கிறார். யாக்கோபு நாட்டை விட்டு ஓடி சீரியா தேசத்தானாகிய தன்னுடைய தாய் மாமன் லாபானிடத்தில் போய்த் தஞ்சம் புகுந்து கொள்கிறார். யாக்கோபை கர்த்தர் ஆசீர்வதித்துப் பெருக பண்ணினார். நான்கு மனைவிகள், 12 குழந்தைகள். இதில் 11 பேர் ஆண் பிள்ளைகள்.

இந்தச் சூழ்நிலையில் யாக்கோபு தன் தாய் மாமனை விட்டுப் பிரிந்து தன் சொந்த பூமிக்கு திரும்பி வருகிறார். ஆனால் மனதில் பயம் தன் சகோதரன் ஏசா தன்னை கொன்று விடுவானே என்று. இந்த நேரத்தில்தான் தேவ சமூகத்தில் இரவு முழுவதும் காத்திருந்து **"நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை நான் போகவிடேன்"** என்று போராடினார்.

அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும். தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார் (ஆதி 32:28).

இஸ்ரவேலாக மாறிய யாக்கோபுக்கு தன் சகோதரனாகிய ஏசாவின் கண்களில் தேவன் தயவு கிடைக்கச் செய்தார். இஸ்ரவேல் தன் தகப்பனார் ஈசாக்கு வாழ்ந்த கானான் தேசத்தில் குடியேறினார். இஸ்ரவேலின் செல்ல மகனாக இருந்த யோசேப்பை அவன் சகோதரர்கள் பகைத்து துன்புறுத்திக் கொடுமைப்படுத்தி வியாபாரிகளிடம் விற்று விட்டார்கள். யோசேப்பு அடிமையாக எகிப்து தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டான்.

யோசேப்பின் சகோதரர்கள் தகப்பன் இஸ்ரவேலிடம் வந்து தம்பி யோசேப்பு இறந்து விட்டதாக நாடகம் ஆடினார்கள். எகிப்து தேசத்தில் அடிமையாக இருந்த யோசேப்பை கர்த்தர் எகிப்தின் அதிபதியாக உயர்த்தினார்.

தேசம் எங்கும் கொடிய பஞ்சம் உண்டானது. இந்த நேரத்தில் தான் எகிப்து தேசத்தில் தானியங்கள் உண்டு என்பதை கேள்விப்பட்ட இஸ்ரவேல் தன் பிள்ளைகளை அனுப்பி வைக்கிறார். யோசேப்புக்கு உண்மை தெரிகிறது தன்னை கொடுமைப்படுத்தி, பகைத்து, கொலை செய்யத் திட்டமிட்ட என் சொந்த சகோதரர்கள் இவர்கள் அல்லவா? ஆனால் யோசேப்பு சகோதரர்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளுகிறார். விளைவு இஸ்ரவேல் (யாக்கோபு) தன் குடும்பத்தோடு எகிப்து தேசத்திற்கு குடியேறுகிறார். (யாக்கோபு) இஸ்ரவேலின் பிள்ளைகள் இஸ்ரவேலர்கள் என அழைக்கப்பட்டனர். ஆக எகிப்துக்குப்போன யாக்கோபின் குடும்பத்தார் எழுபதுபேர் (ஆதி 46:27). எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள். தேசம் அவர்களால் நிறைந்தது (யாத் 1:7).

**இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் (எண் 24:1)**

**இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பது கர்த்தருக்கு பிரியம் என்றால் நீங்களும் நானும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஏனென்றால் நாமும் விசுவாசத்தின்படி இஸ்ரவேலர்களே!**

**இஸ்ரவேல் என்கிற சந்ததி உருவான வரலாறு இவைகளே அடுத்த மாதம் இஸ்ரவேல் தேசம் உருவான வரலாற்றைக் காண்போம் நண்பர்களே...**

சாதனை: சுமா

# ஐஸ்கிரீம் ராணி



**இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! மின்னல் வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த உலகத்தில் நாம் சாதிக்க நேரமோ, காலமோ, வயதோ தேவையில்லை. எந்தச் சூழ்நிலையிலும் என்னால் சாதித்துக் காட்ட முடியும் என்ற மன உறுதி இருந்தால் மட்டும் போதும், சாதித்து வெற்றி கண்டிடலாம். வாய்ப்பு நம்மைத் தேடி வரும் வரை காலம் தாழ்த்தாமல், வாய்ப்பை நாம் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இப்படி தனக்கான வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு சாதித்த சாதனையாளரின் வாழ்க்கை உங்களுக்காக.**

ராஜ்னி பெக்டர் **(Rajni Bector)** பாகிஸ்தானில் பிறந்தவர். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு ராஜ்னி குடும்பம் இந்தியாவில் குடியேறினார்கள். ராஜ்னி தன்னுடைய திருமணத்திற்குப் பிறகு தனது கணவருடன் இணைந்து குடும்ப வணிகத்தை நிர்வகிக்கத் தொடங்கினார். ராஜ்னி வீட்டில் ஐஸ்கிரீம் மற்றும் கேக்குகளை தயாரித்து நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் கொடுத்து வந்தார்கள். இவர் தயாரிக்கும் உணவுகள் மிகவும் ருசியாக இருந்ததால் ராஜ்னி குடும்பம் மற்றும் நண்பர்கள் மத்தியில் பிரபலம் அடையத் தொடங்கினார்கள். எனவே 20,000 முதலீட்டில் ராஜ்னி தனது சமையல் திறமையை ஓர் வியாபாரமாக மாற்றினார். அவர்களது வீட்டின் பின்புறத்தில் ஒரு சிறிய பேக்கரியாகத் தொடங்கப்பட்ட வியாபாரம், நாளடைவில் **Mrs. Bector's Food Specialities Limited** என்ற பெரிய நிறுவனமாக மாறியது. சுவை மட்டுமல்லாமல் தரத்துடனும், பாரம்பரிய சமையல் குறிப்புகளைப் பயன்படுத்தியும் வாடிக்கையாளர்களைக் கவர்ந்தார்.

1985ஆம் ஆண்டு தன்னுடைய நிறுவனத்தைத் தனியார் நிறுவனமாகப் பதிவு செய்தார். தன் மகனுடன் இணைந்து மிகப்பெரிய பிஸ்கட் உற்பத்தி ஆலையை நிறுவினார். ராஜ்னியின் நிறுவனம் நாளடைவில் மிகப்பெரிய நிறுவனமாக







மாறியது. இவர்களின் வெற்றிக் காரணமாக அவரது கணவர் அநேக மிரட்டல்களை எதிர்கொண்டபோதும் அவற்றை மேற்கொண்டு வெற்றிக் கண்டார்கள்.

**20,000 முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் தற்போது 6000 கோடிக்கு மேலாகச் சந்தை மதிப்பைக் கொண்டுள்ளது. 2021ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் தன்மையைப் பாராட்டி அவருக்குப் பத்மஸ்ரீ அவார்டு வழங்கப்பட்டது. இன்று ராஜ்னி இந்தியாவின் ஐஸ்கிரீம் ராணி என்று அழைக்கப்படுகிறார்.**

**இதை வாசிக்கும் நண்பர்களே! ராஜ்னி நாடு விட்டு நாடு வந்து, பல இன்னல்களைச் சகித்து இன்று சாதனைப் பெண்ணாக உங்கள் முன் வலம் வந்துக் கொண்டிருக்கிறார். வாய்ப்பைத் தேடிக் கொண்டே இருக்காமல், வாய்ப்பை உருவாக்கி வெற்றிக் கண்டுள்ளார். நீங்களும் உங்களுக்கான வாய்ப்பை உருவாக்குங்கள்! வெற்றிக் காணுங்கள்!**





## நம்பிக்கையோடு செயல்பட...

- உன்னால் முடியும் என்ற நம்பிக்கை இருந்தால், நிச்சயம் உன்னால் நிறைவேற்ற முடியும்.
- வாழ்க்கையில் வெற்றி பெற, உனது வேலையை விருப்பத்துடன் செய், அப்போது உன்னால் மிகப்பெரிய இடத்தை அடைய முடியும்.
- வெற்றி என்பது இறுதியானதும் அல்ல, தோல்வி என்பது முடிவும் அல்ல.
- வருங்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல், நிகழ்காலத்தில் சிறப்பாய் செயல்படும்போது, வருங்காலம் தானாகவே மாறும்.
- உனது தோல்விக்கான காரணத்தைத் தேடுவதை நிறுத்திவிட்டு, உன் வெற்றிக்குத் தேவையான விஷயங்களைக் கண்டறிய முயற்சி செய்.
- எல்லோரும் பயணிக்கிறார்கள் என்பதற்காக பின் தொடராதே. உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு.
- வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம்தான். கடமையை செய்தால் வெற்றி, கடமைக்கு செய்தால் தோல்வி.

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (2nd Mar.)

### MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

### TIRUPUR (4PM – 6:30PM)
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

### TUTICORIN (3PM – 5:30PM)
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
LAND MARK: SOUTH POLICE STATION TO KAMARAJ COLLEGE RD.
9442885315 | 9786212103

### TIRUPATI (3PM)
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (8th Mar.)

### BANGALORE (3PM-5PM)
Telugu Church, #21, Nethaji Road, Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

### MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,Nearby MGM Plaza, [Theekadir Busstop] 41, K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

## EVERY 2nd SUNDAY (9th Mar.)

### SANKARANKOIL (2:30PM – 5PM)
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

### THANE (5PM - 7:30PM)
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

### KOVILPATTI (2:30PM -5:30PM)
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
D. No. 5/2, Vaanjinathan Street,North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

### THENI (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,#203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:00PM)
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

### CHENGALPET (3PM – 5:30PM
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

### Namakkal (3PM -5:30PM)
World Revival Prayer Centre,16B Naveen Nest Apartment, Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

## POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Grace Auto
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

## VILLUPURAM (3PM – 5:30PM)
World Revival Prayer Centre, HH Complex,
Namnadu Textiles, Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## ERODE (4PM – 6:30PM)
World Revival Prayer Centre, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

# EVERY 3rd SATURDAY (15th Mar.)

## PERAMBALUR (5PM -8PM)
World Revival Prayer Centre, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

# EVERY 3rd SUNDAY (16th Mar.)

## TIRUNELVELI (2:30 PM)
World Revival Prayer Centre, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

## SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre, HOREB Complex,
1st Floor, P K N Road, (Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

## COIMBATORE (4 PM)
World Revival Prayer Centre, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
9894399599 | 9442885315

## TRICHY (3 PM)
World Revival Prayer Centre, 22A, 1st Floor ,
Thennur High Road, Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

## CHENNAI (3 PM)
World Revival Prayer Centre, Prince Kushal Towers, 7th
Floor B-Wing, Adjacent to LIC Metro, Mount Road,
9488475315

## NALUMAVADI (3PM -5:30PM)
Tabernacle of God, Nalumavadi
9442885315

## JEBAMALAI (2 PM)
Keelamathapuram, Kadaiyam (via), Tenkasi Dist.
8300131000 | 9750955548

## TIRUVARUR (3:30PM)
World Revival Prayer Centre, 1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

## RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre, Railway Station Road,
Zion Nagar, Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

## NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre, NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

## PONDICHERRY (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

## CHITTOOR (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

# EVERY 4th SUNDAY (23rd Mar.)

## THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

## KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

## MUMBAI-MALAD (4PM – 6PM)
Bethel Ground Floor, 305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

## PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre, VK Road.
9442885315

**உங்கள் பகுதியில் நடைபெறும் FELLOWSHIPல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

நிகழ்வு: ஜெயசீலன்



# நான் ஒரு ஜெப வீரன்



**என் அன்பு வாலிபப் பிள்ளைகளே! ஆண்டவராகிய இயேசுவின் பெயரில் உங்களை வாழ்த்துகிறேன். இன்னுமொரு புதிய மாதத்தைக் காணச் செய்த கர்த்தாதிக் கர்த்தரை மனதாரத் துதிக்கிறேன். "நான் ஒரு ஜெபவீரன்" என்ற தலைப்பில் வேதம் கற்றுத்தரும் பல்வேறு விதமான ஜெபங்களை இப்பகுதியிலே கற்று வருகிறோம். நெகேமியா தன் தேசத்து மக்கள் வேதனையில் இருப்பதையும், எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டதையும் அறிந்து, தேவனிடம் ஜெபித்த மன்றாட்டின் ஜெபத்தைக் குறித்து கடந்த மாதம் பார்த்தோம்.**

## வேண்டுதல் ஜெபம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சில வேளைகளில் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்க காலம் தாழ்த்தலாம். அந்தக் கால தாமதத்தை ஏற்றுக் கொள்வது ஒருவேளை நமக்குச் சற்று கடினமாகத் தோன்றும். அதுபோலவே ஆசாரியனாகிய சகரியாவுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அவருக்கு நீண்ட நாட்கள் பிள்ளை இல்லாதிருந்தது.

காபிரியேல் தூதன் சகரியாவிற்கு தரிசனமாகி, **"சகரியாவே பயப்படாதே; உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக"** என்றான் (லூக். 1:13).

சகரியா வெகுகாலமாகக் குழந்தைக்காக ஆண்டவரிடத்தில் வேண்டுதல் செய்து வந்தார். குழந்தை இல்லாதது அவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது, பல வருடங்கள் கடந்து விட்டன. ஏன் இத்தனை வருடங்கள் இவருக்குத் தடை என்று யோசித்தால், வசனம் சொல்கிறது யோவான் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாய் இருப்பான். இயேசு பிறப்பதற்கு சற்று முன்பதாக யோவான் பிறக்க வேண்டும் என்பது தேவ சித்தம் அதனால் தான் இத்தனை கால தாமதம் சகரியாவுக்கு இருந்தது. சகரியாவிற்கு முன் தேவ தூதன் தோன்றி நீ பயப்படாதே நீ இத்தனை நாள்வரை செய்து வந்த வேண்டுதல் கேட்கப்பட்டது, ஆகையால் பிறக்கும் அந்த மகனுக்கு யோவான் என்று பெயரிடுவாயாக என்று சொல்கிறார். யோவான்ஸ்நானகன் கர்த்தருக்கு வழியை ஆயுத்தம் பண்ண தெரிந்துகொள்ளப்பட்டவன். இயேசு இவரிடத்தில் வந்து தான் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பது தேவசித்தமாக இருந்தது. யோவானுடைய பிறப்பின் நிமித்தம் அநேகர் சந்தோஷப் பட்டார்கள். இவர் தான் சுவிசேஷத்தை முதலில் வனாந்திரத்தில் போதித்தார்.



இதுபோல நீங்களும் மிக நீண்ட நாட்களாக ஜெபம் செய்திருக்கலாம். கர்த்தர் இன்றைக்கு உங்களைப் பார்த்து **“பயப்படாதே உன்னுடைய வேண்டுதல் கேட்கப்பட்டது”** அதை ஏற்றக் காலத்தில் செய்வேன் என்று கர்த்தர் சொல்கிறார். நீங்கள் ஜெபிக்கும் அந்தத் தேவைகள் தாமதமானால் அது உங்களுக்குக் கிடைக்கப்பெறும்போது மிகுந்த மகிமை வாய்ந்ததாக இருக்கும். எனவே பயம் கொள்ளாதிருங்கள் உலகத்தை ஜெயித்த இயேசு நம் பட்சத்தில் இருக்கிறார்.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகவே இருக்கிறார். (எபே. 3:20).





அன்பு வாலிப பிள்ளைகளே!
நீங்களும் கூட அநேக நாட்களாக வேலைக்காகவோ, திருமணத்திற்காகவோ அல்லது வேறு ஏதோவொரு காரியத்திற்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கலாம். சகரியாவின் வேண்டுதலை ஏற்ற நேரத்தில் நிறைவேற்றின தேவன், ஏற்ற வேளையில் உங்கள் வேண்டுதல்களையும் நிறைவேற்ற அவர் வல்லமையுள்ளவராக இருக்கிறார். நீங்கள் மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்யும்போது உங்கள் வேண்டுதல்களையும் தேவன் நிறைவேற்றுவார். எதிர்பாருங்கள்!
கர்த்தர் நிச்சயம் செய்வர்! ■

மதுரை மாவட்டத்தில்...

சிறப்பு வாலிபர் எழுப்புதல் கூடுகை

வாலிபர்கள் ஜெப பாரமும் சுவிசேஷ பாரமும் பெற்று கொண்டு தாங்கள் இருக்கும் பகுதிகளில் எழுப்புதலுக்கு வல்லமையாய் செயல்பட வேண்டும் என்பதற்காகவே...

மதுரை தாலூகாவில்...
(NORTH,SOUTH,EAST,WEST)

திருமங்கலம் தாலூகாவில்...

நாள்: ஏப்ரல் 14 (திங்கள் கிழமை)

இடம்: ஏலிம் AG சபை,
கூடல்நகர், மதுரை
செய்தியும், ஜெபமும்:
சகோ. சாம் ஜெபராஜ்

இடம்: சுகஜீவ தேவ சபை, சீயோன் நகர்
(மாஸ் மஹால் அருகில்), மறவன் குளம்,
திருமங்கலம், மதுரை.
செய்தியும், ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு: 97509 55548










ஜெபம்: எஸ்தர்

# ஜெபக் கையேடு

## மார்ச் 2025

**1.** சீனாவில் பரவி வரும் புதிய **HMPV** (ஹியுமன் மெட்டாப் நியூமோ வைரஸ்) வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் எடுக்கும்படி ஜெபிப்போம்.

**2.** சீனாவில் **HMPV (Human Metanemo Virus)** வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. **HMPV** வைரஸ் காற்றின் மூலம் எளிதில் பரவக் கூடியதால், யாரையும் தாக்காதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபிப்போம்.

**3.** உலகம் முழுவதும் 'ஸ்க்ரப் டைஃபஸ்' நோயால் ஆண்டுக்கு 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் இவ்வைரஸ் பரவலை தடுக்க சுகாதாரத் துறை நடவடிக்கை எடுக்கும்படி ஜெபிப்போம்.

**4.** இந்த வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சுகம் பெறவும், இது இனியும் யாரையும் தாக்காதபடி முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**5.** 'ஸ்க்ரப் டைஃபஸ்' என்னும் பாக்டீரியாவால் மக்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும், இது முற்றிலும் கூண்டோடு அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

**6.** தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு கோரி 1.30 கோடி படித்த இளைஞர்கள் காத்திருக்கின்றனர். அவர்களின் படிப்பிற்கு ஏற்ற வேலைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

**7.** படித்த இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகளை மத்திய மாநில அரசுகள் உருவாக்கிக் கொடுக்கும்படி ஜெபிப்போம்.

**8.** இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போரில் உயிரிழக்கும் வீரர்கள் ஒருபுறமிருக்க, மறுபுறம் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு உயிரை மாய்த்துக் கொள்ளும் இஸ்ரேல் ராணுவ வீரர்களின் விகிதம் அதிகரித்து இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. போர் முடிவுக்கு வர மற்றும் போர் வீரர்களின் மன அழுத்தங்கள் மாற ஜெபிப்போம்.

**9.** இஸ்ரேல் பாலஸ்தீன தேசங்களின் சமாதானத்திற்காக ஜெபிப்போம்.

**10.** இஸ்ரேல் பாலஸ்தீன தேசங்களில் வீணாக மரணங்கள் ஏற்படாதபடி இரண்டு நாட்டு தலைவர்களும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஜெபிப்போம்.

**11.** இஸ்ரேல் பாலஸ்தீன தேசத்திற்கு யுத்தத்துக்கு ஒத்தாசை வழங்கும் நாடுகள் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்த ஜெபிப்போம்.

**12.** இஸ்ரேல் பாலஸ்தீன தேசத்தில் மரணப் பிடியில் சிக்கியுள்ள அனைவரும் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

**13.** இஸ்ரேல் பாலஸ்தீன தேசத்தில் யுத்தத்தினால் மரித்த குடும்பங்களின் ஆறுதலுக்காகவும் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்பவர்கள் சீக்கிரம் சுகம் பெறவும் ஜெபிப்போம்.

**14.** புற்று நோயை முற்றிலும் குணமாக்கும் மருந்துகள் விரைவில் கண்டுபிடிக்கப்பட, தேவனுடைய ஞானம் வெளிப்பட ஜெபிப்போம்.

**15.** புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புற்றுநோயின் செல்கள் உடலின் பிற பாகங்களுக்கும் பரவாமல் கர்த்தர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்படியாகவும், சுகப்படுத்தும்படியாகவும் ஜெபிப்போம்.



**16.** புற்றுநோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடிப்பதின் மூலம் வளர விடாதபடிக்கு சிகிச்சை அளித்து எளிதாகக் குணமாக்க முடியும் என்ற விழிப்புணர்வு மக்களுக்கு உண்டாக ஜெபிப்போம்.

**17.** அதிகமாகப் புற்றுநோயால் பாதிக்கப்படும் நுரையீரல், வயிறு, குடல், உணவுக்குழாய், மார்பகம், கர்ப்பப்பை இவைகள் இயேசுவின் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்

**18.** புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களைப் புறம்பே தள்ளாமல் அவர்கள்மீது அன்புகூர்ந்து, தைரியப்படுத்துகிறவர்களாய் நம்முடைய சமுதாயம் மாற ஜெபிப்போம்.

**19.** வாலிப பிள்ளைகளுக்குள் காணப்படுகின்ற குழப்பங்கள், தோல்விகள், மன அழுத்தங்கள், கஷ்டங்கள், வெற்றி தோல்வியை எதிர்கொள்ள முடியாதபடிக்கு அவர்கள் எடுக்கிறதான தவறான முடிவுகள், தற்கொலை முயற்சிகள் மாற, அவர்களுடைய சிந்தைகளை யோசனைகளைக் கர்த்தர் ஆளுகை செய்யும்படியாக, சமாதானம் உண்டாகும்படியாக ஜெபிப்போம்.

**20.** மன அழுத்தத்தினால் மனநலம் பாதிக்கப்பட்டு, மனசோர்வோடு இருக்கின்ற வாலிபப் பிள்ளைகளுக்குச் சரியான சிகிச்சை அளிக்கவும் அவர்களுக்குச் சரியான வாழ்க்கை நடைமுறையைக் கற்றுக் கொடுக்கவும் நல்ல ஆலோசனை மையங்கள் எழும்ப ஜெபிப்போம்.

**21.** பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட, வாலிப ஆண்/ பெண் பிள்ளைகள், பயம், குழப்பம், மன அழுத்தம் இவைகளிலிருந்து விடுதலை பெறவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**22.** மது, போதை மருந்து, சிகரெட், ஆபாச காட்சிகள் பார்ப்பது, மீடியாவுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் வாலிப பிள்ளைகளைக் கர்த்தர் விடுவிக்க ஜெபிப்போம்.

**23.** வாலிப பிள்ளைகளுக்கு, கர்த்தர் நல்ல ஞானத்தையும், அறிவையும் கொடுத்து, நல்ல சுகம் கொடுத்து அவர்கள் கர்த்தரை தேடும்படியாகவும் எழுப்புதலில் தேவன் பயன்படுத்தும்படியும் ஜெபிப்போம்.

**24.** இந்தியாவில் 38% இளைஞர்கள் (15-29 வயதுக்குட்பட்ட) சாலை, பிற விபத்துகளில் இறப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இளைஞர்கள் பாதுகாக்கப்படவும், பொறுப்புடன் நடந்து கொள்ளவும் ஜெபிப்போம்

**25.** மணிப்பூரில் கடந்த ஆண்டு மே மாதத்திலிருந்து மெய்தி மற்றும் குகி சமூகத்தினருக்கு இடையே நடைபெறும் கலவரத்தைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவும், இயல்பு நிலை திரும்பவும் ஜெபிப்போம்.


**26.** பதுக்கி வைத்திருக்கும் துப்பாக்கி தோட்டாக்கள், கையெறி குண்டுகள் உள்பட பயங்கர ஆயுதங்களைப் பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்யவும் அவைகளை தடை செய்யவும் ஜெபிப்போம்.

**27.** இனக்கலவரத்தில் 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அங்கு இனியும் கலவரங்கள் நடைபெறாமல் அரசாங்கம் கட்டுக்குள் கொண்டுவர ஜெபிப்போம்.

**28.** வன்முறையைத் தூண்டி ஜனங்களை வஞ்சிக்கிற ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

**29.** சமூக வலைத்தளங்களில் பிரபலமாவதற்காகவே வாலிபர்கள் செய்யும் சாகசங்களினால் ஏற்படும் விபத்துகளினால் மரணங்கள் நடைபெறுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

**30.** ரீல்ஸ் மோகத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் வாலிபர்கள் அதிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.



# செய்திகள்!

## செயலிகள் மூலம் 34 சதவீதம் பேர் மோசடி நபர்களிடம் பணத்தை இழக்கின்றனர்



பணம் செலுத்தும் செயலிகள் மூலமாக, நாட்டில் மூன்றில் ஒரு பகுதியினர் மோசடி நபர்களிடம் பணத்தை இழப்பதாக, ஆய்வில் தெரியவந்துள்ளது.

எப்ஐசிஓ என்ற தனியார் ஆய்வு நிறுவனம் ஆன்லைன் மோசடிகள் குறித்து கடந்தாண்டு ஆய்வு ஒன்றை நடத்தியது. இந்தியாவில் சுமார் ஆயிரம் இளைஞர்களிடமும், 14 நாடுகளைச் சேர்ந்த 11,000 பேரிடமும் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதுகுறித்து எஐசிஓஇ நிர்வாக இயக்குனர் கூறியதாவது: பணம் செலுத்தும் செயலிகள் மூலமாக நடைபெறும் மோசடிகள் இந்தியாவில் அதிகரித்து வருகின்றன.

பொருட்கள் மற்றும் சேவைகள் அல்லது முதலீடுகளுக்குப் பணம் செலுத்தி 34 சதவீதம் ஏமாற்றம் அடைந்துள்ளனர். மோசடி நபர்கள் அனுப்பும் தகவல்கள் மூலம் 60 சதவீதம் பேர் மோசடியில் சிக்கியுள்ளனர். ரூ.8 லட்சத்துக்கு மேல் அதிகமான மோசடிகளின் சதவீதம் கடந்த 2023-ம் ஆண்டில் 2 சதவீதமாக இருந்தது. இது 2024-ம் ஆண்டில் 4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ரூ.50,000-க்கும் கீழ் உள்ள மோசடியில் சிக்கியதாக 56 சதவீதம் இந்திய நுகர்வோர்கள் தெரிவித்துள்ளனர். மோசடிகளிலிருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாக்க வங்கிகள் மேற்கொண்ட மோசடி தடுப்பு நடவடிக்கைகளை 45 சதவீத வாடிக்கையாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். மோசடிகளுக்கும் மத்தியிலும் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துதல் இந்திய வர்த்தகத்தில் தொடர்ந்து அதிகரிக்கிறது.

**– இந்து தமிழ் திசை, ஜனவரி 29.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# மகளிர் தினம்

## மார்ச் 8

### ரேஷ்மா நிலோஃபர் – இந்தியாவின் முதல் பெண் மாலுமி



சென்னையில் பிறந்து, மேற்கு வங்கத்தில் பணியாற்றிய ரேஷ்மா நிலோஃபர், இன்று உலகம் முழுவதும் கப்பல் இயக்கி வருகிறார். 2011-ஆம் ஆண்டு மாலுமி பயிற்சிக்காக விண்ணப்பித்த அவர், ஆறரை ஆண்டுகளுக்குப் பிறகு, 2018-ஆம் ஆண்டு நதி மற்றும் கடல் மாலுமியாகத் தகுதி பெற்றார். பயிற்சிக்காக மேற்கு வங்கம் சென்றபோது, மொழி மற்றும் கலாச்சார வேறுபாடுகளைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதுவரை, அவர் 40-க்கும் மேற்பட்ட நாடுகளுக்குக் கப்பலை இயக்கிச் சென்றுள்ளார். அவரது சாதனையை அங்கீகரிக்கும் விதமாக, இந்தியாவின் மிக உயர்ந்த 'நாரி சக்தி புரஸ்கார்' விருது அவருக்கு வழங்கப்பட்டது.

### ஆரதி சாஹா – ஆங்கிலக் கால்வாயைக் கடந்த முதல் இந்திய பெண்



1959-ஆம் ஆண்டு, ஆரதி சாஹா, ஆங்கிலக் கால்வாயைக் கடந்த முதல் இந்திய பெண்ணாகத் தேர்வானார். அவருடைய இந்தச் சாதனை, இந்திய விளையாட்டு வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல்லாக அமைந்தது. 1960-ஆம் ஆண்டு, பத்மஸ்ரீ விருது பெற்ற முதல் இந்திய விளையாட்டு வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார். மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் பிறந்த அவர், வெறும் நான்கு வயதிலேயே நீச்சல் பயிற்சியைத் தொடங்கினார்.

### மிதாலி ராஜ் – இந்திய கிரிக்கெட்டில் அதிவேக சாதனையாளர்



இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டில் இரட்டை சதம் அடித்த முதல் பெண் என்ற வரலாற்று சாதனை மிதாலி ராஜ் அவருக்குரியது. உலகளவில் இந்தச் சாதனையை முதன்முதலாகப் படைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒருநாள் பன்னாட்டுத் துடுப்பாட்டப் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த முதல் பெண் மட்டையாளர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். மேலும், தொடர்ந்து ஏழு போட்டிகளில் 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த சாதனையாளராகவும் விளங்கினார்.

**Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847**
**Postal Registration No: TTN/26/2023-2025.**
**Date of Publication: 25 – 02 -2025**
**Date of Posting: 28th to 30th of every month.**
**Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.**
**Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.**

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## பேர்ணாம்பட்டில்..

நாள்: **மார்ச் 16,**
(ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:
மாலை 3 மணி முதல்
6 மணி வரை

இடம்:
எழுப்புதல் ஜெபக் கூடாரம்,
இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு
வி. கோட்டா ரோடு,
பேர்ணாம்பட்டு.

தேவ செய்தி:
**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு: 99408 54125

## சேலம் மாவட்டம்
## கல்வராயன்மலையில்...

நாள்: **ஏப்ரல் 19,**
(சனிக்கிழமை)

நேரம்:
மாலை 6 மணி முதல்
9 மணி வரை

இடம்:
ஸ்ரீ லட்சுமி அம்மாள்
திருமண மண்டபம்
பிரபாவதி பள்ளி அருகில்,
சேலம் ரோடு, கருமந்துறை.

தேவ செய்தி:
**சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு: 93858 35867,
9597754872, 9962085523

## மும்பையில்...

நாள்: **ஏப்ரல் 5,**
(சனிக்கிழமை)

நேரம்:
மாலை 5 மணி முதல்
9 மணி வரை

இடம்:
RP Mangala School,
Opp Bank of Maharashtra,
Near Railway Station,
Thane - East

தேவ செய்தி:
**சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு: 90048 82470

